விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 24
ஒலி 335 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (19.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நல்லூரில் நடைபெற்ற சூரசம்ஹார நிகழ்வு



### செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால்
## நவம்பர் 27 அன்று பிரபாகரன் மகள் துவாரகாவை உயிர்ப்பிக்கத் திட்டம்
### புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகள் துவாரகா பிரபாகரன் நவம்பர் 27ஆம் திகதி உயிருடன் இருக்கிறார் என்பதை உணர்த்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு வீடியோ ஒன்று உலகம் முழுவதும் பரப்பப்பட உள்ளதாக வெளி 19

### பொன்னாலையில்
## பற்றைக்குள் இருந்து ஆணின் சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பொன்னாலை சந்திக்குச் சமீபமாக வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள பற்றைக்குள் இருந்து நடுத்தர வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்து சில நாட்கள் கடந்திருக்க 19

# நெருக்கடியாக்கும் அரசின் திட்டங்கள்

## தென்னிலங்கையில் அரசுக்கு எதிராகப் போராட்டம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னிலங்கையில் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

### முல்லையில் காற்று சுழற்சி
## வடக்கு - கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக்கு தெற்காக காற்று சுழற்சி ஒன்று உருவாகியுள்ளதால் வடக்கு - கிழக்கில் மழை பெய்யும் என யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை முதுநிலை விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித் 19

## 30 வகையான பொருட்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு

(கொழும்பு)

ஜனவரி முதல் முப்பது வகையான பொருட்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு அளிக்க நிதி அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

கோதுமை மா, குழந்தைகளுக்கான பால் மா, மருந்துகள் மற்றும் மருந்து பொருட்கள், ஆயுர்வேத உபகரணங்கள் மற்றும் பொருட்கள், விவசாய டிராக்டர்கள், உரங்கள், விதைகள் மற்றும் தாவரங்கள், இறால் பண்ணை தீவனங்கள், கால்நடை தீவனங்கள், கோழித் தீவனங்கள், ஜவுளி நூல்கள் உட்பட தொழில்துறையில் பயன்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட பொருட்கள். இந்த வற் வரியில்இல் இருந்து விலக்கு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 170 19

## வவுனியா ஏ9 வீதியில் மோ.சைக்கிள் விபத்து
### பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா, ஏ9 வீதி சாந்தசோலை சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழந் 19

### பருத்தித்துறை கடற்பரப்பில்
## 22 தமிழக மீனவர்கள் கடற்படையால் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.


இரண்டு படகில் வந்த 22 மீனவர்களையும் படகுகளையும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று 19

### மட்டுவிலில்
## இளைஞனின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த 31 வயதான இளைஞன் ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை அவருடைய வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19

### உலகக்கிண்ண கிரிக்கெட் - 2023
## இறுதிப் போட்டி இன்று
### ஆஸி - இந்தியா பலப்பரீட்சை



நடுவு நிலை தவறா ... க்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பில் மோ.சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

பல்சர் 150 ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருட்டு போயுள்ளது. மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மோட்டார் சைக்கிளை வீட்டில் நிறுத்திவைத்துவிட்டு திறப்பினை கழற்றாமல் விட்டுள்ளார். இந்நிலையில் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-104)

# ஆசிரியர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அரியாலை பகுதியில் உள்ள பாடசாலையில் மாணவனை தாக்கிய ஆசிரியரொருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றையதினம் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவரொருவர் பாடசாலைக்கு வராத நிலையில் நேற்று முன்தினம் ஆசிரியரால் தாக்கப்பட்டுள்ளார்.

மாணவன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைக்கு பின்னர் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-104)


## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

077 138 7596, 071 999 9306
021 222 9306 (17927)

## மெட்டி ஒலி திருமண சேவை

ஐரோப்பாவிலுள்ள(சூரிய செவ்) மணமகனுக்கு பட்டப்படிப்பு படித்த (சூரிய செவ்) மணமகள் தேவை. 1999,2004 மணமகளுக்கு A/L படித்த மணமகன் தேவை. 1996 கனடா பெண் பல்கலைக்கழகம் படித்த மணமகன் தேவை. உங்கள் தகுதிக்கு ஏற்ற மணமகன், மணமகள் எல்லா நாட்டிலும் பார்த்து தரப்படும். 1991 பெண் அவுஸ்திரேலியா பல்கலைக்கழக மணமகன் தேவை.

074 026 6554, 077 023 7639
Viber - 0094767475219 (17930)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் பணிபுரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான பணிபுரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகள் வடமராட்சிக்கு அண்மையில் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது.)

077 864 9878
077 634 3103 (Viber) (17918)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7667)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர்க் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர் செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம்.

1 சதுரஅடி 150/= இலிருந்து

10 வருட உத்தரவாதத்துடன், பொருள்களுக்கு விலைக்கழிவும் உண்டு.

Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்களிடம் இருந்து உலகத்தரமிக்க இரசாயன பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள் போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள் (17928)

North and East Engineering FINEX
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## Romania வேலைவாய்ப்பு

Romania நாட்டில் Electrician மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புகள் உள்ளன. கனடாவிற்கான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

Hybrid International hub (pvt) Ltd, Jaffna
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) (C-7666)

021 222 1265, 076 250 0098
077 815 5920

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் வீமன்காமம் வடக்கு வெண்காயச் சங்கத்திற்கு அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. (17929)

077 359 4775

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
077 038 5584 (17936)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பசுபதி புனிதவதி

[ திதி : அட்டமி ]

தோற்றம் : 04.08.1959
மறைவு : 01.12.2022

அவர்களின் திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (20.11.2023) திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(17932)

அறிவொளி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தகவல்
குடும்பத்தினர்.


## விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (17936)

Lanka Cargo Worldwide Express



இல 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002

## KTC கல்வி நிலையம்

ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில்.

2023 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச்சித்தி பெற்ற எமது மாணவர்களை வாழ்த்துகிறோம்.



N.பாவனா - 184




J.ஹரிஸ் - 155



T.ரக்ஷா - 155



L.டெனிஸ்ரா - 154



T.பிரமிதன் - 148



N.கனியா - 145

(C-7665)

விளம்பர அனுசரணை : Langes Cushion Works, 210 Navalar Road, Jaffna.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரப் பகுதியில் 3 படுக்கையறையும் தளபாட வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை. (17929)

077 359 4775


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷாக்கள் காரணம் என்பதனை ஏற்கமுடியாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷாக்கள் காரணம் என்பதனை ஏற்க முடியாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

"பொருளாதாரப் பாதிப்புக்கு யார் காரணம் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சியினர் அரசியல் பிரசாரம் செய்கிறார்கள். உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை தவறாக சித்தரிக்கிறார்கள். சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற பல சம்பவங்களை மறந்து விட்டு செயற்படுவது கவலைக்குரியது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை கொண்டு பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷாக்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட முடியாது. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கொண்டே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

வரையறுக்கப்பட்ட நிலைக்கு அப்பாற்பட்டு நீதிமன்றம் செல்லவில்லை. இதனால்த்தான் பொருளாதார பாதிப்புக்கு தெரிவுக்குழுவை கோருகிறோம். பொருளாதார பாதிப்புக்கான காரணிகள் நீதிமன்றத்தில் முழுமையாக ஆராயப்பட்டதா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை எதிர்க்கட்சியினர் விமர்சிக்கிறார்கள்.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பல முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை, என்று விமர்சிக்கிறார்கள்.

குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் அடிப்படை கொள்கையாக கொண்டுள்ளார்கள். பொருளாதார பாதிப்புக்கு 69 இலட்ச மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. பாரிய நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவரிடம் வலிறுத்தினார்.

ஆனால் அவர் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் சோதிடம் பார்த்துக் கொண்டிருந்தார். நாட்டுக்காகவே நாங்கள் மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளார்கள். பொருளாதார பாதிப்பை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள போலியான போராட்டத்தை தோற்றுவித்தார்கள். போராட்டத்தின் ஊடாக பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது." என வலியுறுத்தியுள்ளார். (ம)

# சமாதான நீதவானாக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)



மண்டைதீவைச் சேர்ந்த திருமதி. சற்குணராணி யாதவகுலசிங்கம் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதிச் சேவைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ஜெகநாதன் கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து சமாதான நீதவானாகப் பதவியேற்றுக் கொண்டார்.

திருமதி. சற்குணராணி யாதவகுலசிங்கம் கொழும்பு ஆட்பதிவு திணைக்களம், சங்கானை பிரதேச செயலகம், யாழ்.மாவட்டக் காணிப் பதிவகம் மற்றும் பத்திரமுல்ல பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றில் பொது முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# மாணவர்களுக்கு இலவச காலணிகள்

(கொழும்பு)

8 இலட்சம்பாடசாலை மாணவர்களுக்கு இலவச காலணிகள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சரவையின் அங்கீகாரமும் திறைசேரியின் ஆதரவும் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக சர்வதேச உதவிகளை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# 31 பில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 3 தேர்தல்கள்

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்காக (2024) சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் மூன்று தேர்தல்கள் தொடர்பாக 31 பில்லியன் ரூபா மதிப்பீட்டை தேர்தல்கள் ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கும் ஒரு மாதத்திற்கும் முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அதன்படி அடுத்த வருடம் (2024) செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில், எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளதாகவும், அதற்கமைவாக அடுத்த வருடம் எந்த நேரத்திலும் தேசிய தேர்தலை நடத்துவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு (2022) வாக்காளர் எண்ணிக்கையை விட இந்த ஆண்டு வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நுரைச்சோலை மின்பிறப்பாக்கி அமைப்பில் கோளாறு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இரண்டாம் மின்பிறப்பாக்கியின் உயர் அழுத்த கொதிகலன் அமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அதனை வழமைக்குக் கொண்டு வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மின்சார விநியோகத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் முழுமையான அளவு நீர்மின்னுற்பத்தி இடம்பெறுவதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதில் முன்னோட்ட செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிகரிக்குமாறு கல்வியமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கல்வி அமைச்சரிடம் இந்த கோரிக்கைமுன்வைக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 750 ரூபாவை 1000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கை 20ஆயிரத்தில் இருந்து 30ஆயிரமாக அதிகரிக்கப்பட வேண்டுமென அவர் கோர்ரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (நி-5)

## சர்வதேச நாணய நிதியத்தின்

# 2ஆம் தவணைக் கடன் டிசெம்பருக்குள் கிடைக்கும்

## அமைச்சர் நிமல் சிறிபால நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் உதவியின் கீழ் இரண்டாவது தவணை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் கிடைக்கப்படும் என எதிர்பார்ப்பதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். குறுகிய



கால இலாப நோக்கம்இன்றி, வீழ்ச்சியடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தின் மேலும் ஒரு ஆரம்பத்தையே இம்முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வரவு- செலவுத்திட்டத்தில் அதற்கு அவசியமான திட்டங்கள் உட்பட கொள்கைகள் மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு சிலர் இதனை தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் என்கின்றனர்.

ஆனால் இது அவ்வாறு தேர்தலை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் அல்ல என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய கிரிக்கெட் ரசிகர்களை மைதானத்தில் அமைதியாக்குவோம்

## ஆஸி கப்டன் பெட் கம்மின்ஸ்



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி குறித்து அவுஸ்திரேலிய அணி தலைவர் கூறிய விடயம் தற்போது பேசு பொருளாக மாறியுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி இன்று அஹமதாபத்தில் இடம்பெற வுள்ளது.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன.

இறுதிப் போட்டிக்கு முன்னதான ஊடக சந்திப்பின் போது, அவுஸ்திரேலிய அணி தலைவர் பெட் கம்மின்ஸ் கூறிய விடயம் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாக பரவி வருகிறது.

இன்றைய போட்டியில் இந்திய அணிக்கு ஆதரவாக வரவுள்ள 1.3 இலட்சம் ரசிகர்களையும், மைதானத்தில் அமைதியாக்குவதை விடவும், விளையாட்டில் வேறு மனநிறைவு கிடைக்காது என அவுஸ்திரேலிய அணி தலைவர் பெட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கான ஆதரவு உச்சத்தில் இருந்து வரும் சூழலில், இறுதிப்போட்டியில் 1.3 இலட்சம் ரசிகர்கள் இந்திய அணிக்கு ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், ஊடக சந்திப்பில் அவுஸ்திரேலிய அணி தலைவர் பெட் கம்மின்ஸ் கருத்து வெளியிடுகையில், அஹமதா பத் மைதானத்திற்கு இன்று வரவுள்ள ரசிகர்கள் நிச்சயம் இந்திய அணிக்கு தான் ஆதரவு அளிப்பார்கள் என்று தெரியும். ஆனால் விளையாட்டை பொறுத்த வரையில் 1.3 இலட்சம் ரசிகர்களையும் மொத்தமாக அமைதியாக்குவதை விடவும் வேறு எதுவும் மன நிறைவை கொடுக்காது, அதனை நிறைவேற்றுவதே எங்களின் இலக்கு என்று தெரிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

நிச்சயம் அவர்களுக்கு எதிராக நாங்கள் களமிறங்குவது சிறந்த போட்டியாக இருக்கும்.

மிட்செல் ஸ்டார்க் மற்றும் ஹேசல்வூட் ஆகியோரின் ஆரம்ப பந்துவீச்சு எங்களுக்கு மிக முக்கியமானதாக அமையும்.


அதேபோல், இந்த உலகக் கிண்ண தொடரில் அவுஸ்திரேலிய அணி பெரிதாக நிறைவான வெற்றியை பெறவில்லை.

ஒவ்வொரு போட்டியிலும் கடினமான சூழலில் சிக்கிக் கொண்டு, கடைசி கட்டத்தில் வெற்றி பெறுவதற்கான வழியை கண்டறிந்து வென்றுள்ளோம்.

அதனால், இறுதிப்போட்டியிலும் சிறப்பாக செயல்படுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என பெட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார். (ம)

# ராகுல் டிராவிட்டுக்காக வெற்றி பெற வேண்டும்

## ரோகித் சர்மா



உலகக் கோப்பை 2023 இறுதிப் போட்டி குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற இருக்கிறதுஇந்நிலையில், நேற்று பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியா அணி கப்டனும், இந்திய அணி கப்டன் ரோகித் சர்மாவும் பேசினர்.

அப்போது பேசிய ரோகித் சர்மா, இது உண்மையில் தங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய தருணம். இது இறுதி உந்துதலுக்கான நேரம். ராகுல் டிராவிட்டுக்காக கோப்பையை வெல்லுவோம்" என கூறினார்.மேலும் அவர் கூறியதாவது,

உலகக் கோப்பை தொடங்குவதற்கு முன்பு, இவ்வாறு போட்டியை விளையாட நான் திட்டமிட்டிருந்தேன். அது நடக்குமோ இல்லையோ என்று யோசிக்கவில்லை. ஆனால், கொஞ்சம் சுதந்திரத்துடன் நான் என்னை வெளிப்படுத்த விரும்பினேன்.

இங்கிலாந்து ஆட்டத்தின்போதும் எனது அணுகுமுறையை மாற்றிக்கொண்டேன். அதைத் தான் முன்னணி வீரர்கள் செய்வார்கள். நான் என் தந்திரங்களை மாற்றினேன். நான் அங்கு சென்று அமைதியாகவும் எளிதாகவும் இருக்க வேண்டும் என்று நம்புகிறேன். அதற்காக கடினமாக உழைத்தால் நன்றாக இருக்கும். நான் உற்சாகமாகி, அதிக அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. இது நான் மட்டுமல்ல, மற்ற வீரர்களும் உடை மாற்றும் அறையில் அப்படிதான் இருப்போம்.

எங்களுக்கு இது ஒரு மகத்தான சந்தர்ப்பம் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் இது வரை கண்ட கனவு எல்லாம் இங்கே உள்ளது. நான் 50 ஓவர் உலகக் கோப்பைகளைப் பார்த்து வளர்ந்திருக்கிறேன், அதனால் எனக்கு இது மிகப்பெரிய சந்தர்ப்பமாக இருக்கும்.

உடை மாற்றும் அறையில் சிரிப்பும் இருக்கிறது, கொஞ்சம் பதற்றமான முகங்களும் இருக்கிறது. நான் அதை மறைக்கப் போவதில்லை. ஆனால் அது தான் விளையாட்டின் அழகு. நான் சொன்னது போல், இந்தியாவுக்காக விளையாடுவது தினமும் இறுதிப் போட்டியில் விளையாடுவது போன்று சிறந்தது. நாங்கள் எங்கள் பயணத்தை ரசித்துவிட்டோம். இப்போது ஒரு இறுதி உந்துதலுக்கான நேரம் இது.

ராகுல் டிராவிட்டின் பங்கு முற்றிலும் மிகப்பெரியது. குறிப்பாக வீரர்களுக்கு பங்கு தெளிவுபடுத்துவதில் சிறந்தவர். அவர் தனது கிரிக்கெட்டை விளையாடிய விதம் மற்றும் நான் எனது கிரிக்கெட்டை விளையாடுவது மற்றும் சில விஷயங்களை ஒப்புக்கொள்வது, அந்த சுதந்திரத்தை எங்களுக்கு வழங்குவது என அவை அனைத்தும் அவரைப் பற்றி நிறைய கூறுகிறது. இந்திய கிரிக்கெட்டுக்காக அவர் செய்தது மிகப்பெரியது. அவரும் இந்த நிகழ்வில் பங்கேற்க விரும்புகிறார். அவருக்காக விளையாடி கோப்பையை வெல்லுவோம் என தெரிவித்தார். (ம)

# நாங்கள் 450 அடிப்போம் இந்தியா 65 க்கு ஆல் அவுட்

## மிட்செல் மார்ஷ் கணிப்பு



உலகக் கோப்பை 2023 இறுதிப் போட்டி குஜராத் மாநிலத்தின் அஹ மதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற இருக்கிறது. இந்த போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரே லியா அணிகள் மோதுகின்றன. இறுதிப் போட்டிக்காக இரு அணி வீரர்களும் ஆயத்தமாகி வருகின்றனர்.

இந்த நிலையில், உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற கேள்விக்கு அவுஸ்திரேலியா அணி வீரர் மிட்செல் மார்ஷ் கடந்த மே மாதம் வெளியான பாட்காஸ்ட் ஒன்றுக்கு அளித்த பதில் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது. அதில், தனது அணி தான் கோப்பையை வெல்லும் என்று அவர் தெரிவித்து இருக்கிறார்.

இதுதவிர, இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் எவ்வளவு ரன்களை அடிக்கும் என்பதையும் அவர் கணித்திருக்கிறார். அதன்படி, அவுஸ்திரேலியா அணி 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 450 ரன்களை குவிக்கும் என்றும் அடுத்து களமிறங்கும் இந்திய அணி வெறும் 65 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி அடையும் என்று தெரிவித்தார். இவரின் இந்த பதில் தொடர்பான மீம்கள் தற்போது சமூக வலைத்தாளங்களில் வைரல் ஆகி வருகிறது. (ம)


# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் பாக்கியரத்தினம்



பிறப்பு 21.02.1935 இறப்பு 17.11.2023

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பாக்கியரத்தினம் அவர்கள் கடந்த 17.11.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2023 செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் காடை கரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: குடும்பத்தினர் 077 945 4688, 074 [illegible]


# 2023 உலகக் கிண்ண இறுதி போட்டிக்கு பலத்த பாதுகாப்பு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி அஹமதாபாத் நரேந்திர மோடி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவுஸ்திரேலிய துணை பிரதமர் ரிச்சர்ட் மார்ல்ஸும் நேரில் பார்வையிட உள்ளமையினால் போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னை முக்கோண வலய பயிர்ச்செய்கை ஆரம்பம்





(அராலி)

வடக்குதென்னைமுக்கோண வலயத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் கௌரவ ஆளுநரால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தில் தென்னம் பிள்ளைகளை நாட்டும் நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில், தென்னம்பிள்ளைகள் நடப்பட்டு செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் தென்னம் கன்றுகளை நாட்டும் நிகழ்வு மன்னார் ஆண்டாங்குளம் பாடசாலையிலும் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(நி-5-104-285)

# கையடக்கத் தொலைபேசி திருட்டில் ஈடுபட்ட மூவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

பேருந்துகளில் பயணம் செய்பவர்களை இலக்கு வைத்து கையடக்கத் தொலைபேசி திருட்டில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான 8 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பேருந்தில் பயணம் செய்பவர்களின் தொலைபேசிகள் திருட்டுப் போவது சம்பந்தமாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பட்டு வந்த நிலையில், யாழ்ப்பாண பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் சிவலிங்கபுளியடியை சேர்ந்த 24, 31 மற்றும் 33 வயதுடையவர்களை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-33)

# மார்கழி இசைவிழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

இந்தியத்துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடம் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழாவும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும் விற்பனையும்யாழ். மத்திய கலாசார மண்டபத்தில் மார்கழி மாதம் 27,28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இசைவிழா நிகழ்வில் தமிழ் மண்ணில் புகழ்பூத்தஇசை வித்துவான்களும் இந்தியக் கலைஞர்களும் பங்குபற்ற உள்ளனர். இசைவிழா நிகழ்ச்சிகளானது மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை நடைபெறவுள்ளன.

அதேவேளை மார்கழி இசை விழா நடைபெறும் நாட்களில் மண்டபத்திற்கு வெளியில் அமைந்துள்ள திடலில் சுமார் 150 இற்கு மேற்பட்ட காட்சிக்கூடங்களை அமைத்து வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய, நடுத்தர தொழிற்துறை சார்ந்த உற்பத்தியாளர்களின் தரம் வாய்ந்த உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5)



அகில இலங்கை ரீதியாக தமிழ்த் தினப் போட்டியில் சாதனையீட்டிய மாணவர்களுக்கு தமிழ் தேசிய கலை இலக்கியப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. (படம்- தேவானந்தன்)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

வட்டு வடக்கூரின் வள்ளலென வாழ்ந்திருந்து
கட்டுக் குலையாத கண்ணியவான் கொடை வள்ளல்

**உயர்திரு.வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**

(சங்கானை பாக்கியரத்தினம் காட்வெயாஸ் உரிமையாளர்)
தரன் ரேடேஸ் யாழ்ப்பாணம், பணிப்பாளர் Jet Steal Colombo-12



அவர்களை நினைவுகூர்வோம்.

எத்தனை ஆண்டுகளாய் வட்டூரில் வாழ்ந்திருந்து
முத்திரை பதித்த வாழ்வில் மூத்தோராய்த் தானிருந்து
வித்தக வியாபாரத் தொழிலிலோர் கரை கண்டு
உத்தமராய் ஊர்க்கெல்லாம் உதவுகரம் நீட்டி நின்று
பெத்தவரைப் பேர் சொல்லிப் புகழ் படைக்க வைத்திட்ட
மெத்தவே உயர்ந்த எங்கள் பொன்னம்பலம் ஐயாவார்
நித்தமந்தப் பித்தனடி வாழ்வதற்காய் எமைப் பிரிந்து
பத்தோடு இரண்டாண்டும் நிறைந்ததின்று நினைவுகூர்வோம்!

பிறப்பு 11.10.1927 இறப்பு 02.11.2011

வட்டு-வடக்கு,
சித்தங்கேணி.

(17902)

உயிரில் கலந்த
குடும்பத்தினர்.

# இராசிபலன்

19.11.2023
கார்த்திகை 03, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி முற்பகல் 8.07 மணிவரை
சப்தமி பின்னிரவு 5.53 மணிவரை

திருவோணம் முன்னிரவு 11.53 மணிவரை
சுபநேரம் -9.09-10.39 மணிவரை
இராகு காலம்-4.39-6.09 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புநர்பூசம்

வளவன்


மேஷம்

வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.


கடகம்

நீண்ட நாளைய நெருங்கிய நட்பு கிடைக்கலாம், பயணங்களால் புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


மகரம்

பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும்.


ரிஷபம்

வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் தீரும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.


சிம்மம்

சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், வளர்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மிதுனம்

வரவைக் காட்டிலும் செலவு கூடும், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.


கன்னி

நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


தனுசு

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


மீனம்

அதிஷ்கரமான நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

உலகில் வார்த்தைகளுக்குக் கட்டுப்படாத ஒரே மயக்கம் காதல் மயக்கம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி அறுப்புத் தொடர்பில் சந்தேகநபர் கைது

(சாவகச்சேரி)

கடந்த மாதம் கச்சாய் பகுதியில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன் திருட்டுப் பொருள் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் கடந்த 06.11.2023 அன்று நண்பகல் வேளை தனது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து ஏற்றி வரச்சென்றபெண்ஒருவருடைய மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு பவுண் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர் அறுத்துக்கொண்டு தப்பித்திருந்தார்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சி.சி.ரி.வி கேமராவை அடிப்படையாக கொண்டு கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த 22வயதான இளைஞன் ஒருவரை கடந்த 14ஆம் திகதி கைது செய்ததுடன் அறுக்கப்பட்ட சங்கிலி, பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், திருட்டு தினத்தன்று அணிந்திருந்த உடை ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-30)

# வீதியில் கழிவுநீரை ஊற்றிய பவுசரை மடக்கிப் பிடித்த பிரதேச வாசிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி நாயன்மார்கட்டு பகுதியில் கழிவுநீரை ஊற்றி விட்டு செல்ல முயன்ற பவுசர் வண்டியொன்று அப்பகுதி மக்களால், மடக்கி பிடிக்கப்பட்டு சுகாதார பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருநெல்வேலியில் உள்ள நட்சத்திர விடுதியொன்றின் கழிவுநீரை அகற்றும் பவுசர் வண்டியே இவ்வாறு பிடிபட்டது.

வழமையாக இவ்வாறு கழிவுகளை ஊற்றி விட்டு செல்லும் பவுசர் வண்டியை அவதானித்த அப்பகுதி மக்கள் நேற்றுக் காலை மறைந்திருந்து கழிவுநீரை ஊற்றும் போது கையும் களவுமாக பிடித்து சுகாதார பரிசோதகரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-33)

## "சங்காபிஷேகமும்" சோமவார உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெங்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயங்களில் நாளை திங்கட்கிழமை மதியம் 2 மணிக்கு 108 சங்காபிஷேகமும் மதியம் 3.30 மணிக்கு சோமவார உற்சவமும் இடம்பெற்று அப்பன், அம்மை உள்வீதி வலம் வரும் திருக்காட்சி இடம்பெறவுள்ளது.

இம்மாதத்தில் இனிவரும் மூன்று திங்கட்கிழமையும் சோமவார உற்சவம் சிறப்பாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநகர்பகுதியில்ஒருவர் தனது வீட்டில் கேரள கஞ்சாவை மறைத்து வைத்திருப்பதாக சிறப்பு அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை 7 மணிஅளவில்சந்தேகநபர்கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து சுமார் ஒரு கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-315)

## ஊரியான் தட்டுவன் கொட்டி

# புதுவீதிக்கு செல்லும் பாதையை சீர்செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை



(கிளிநொச்சி)

ஊரியான் தட்டுவன் கொட்டி புதுவீதிக்கு செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. அதனை சீர் செய்து தருமாறு ஊரியான் மேற்கு கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தட்டுவன் கொட்டியில் இருந்து கண்ணகி நகருக்கான பாதையினை சுமார் 500 விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். மண், கிரவல் கொண்டு செல்லும் கனரக வாகனங்களால் இப்பாதை மிகவும் சேதமடைந்துள்ளது. விவசாயிகள் தங்கள் வயலுக்கு தேவையான உரங்களை கொண்டு செல்ல முடியாதுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் இப் பாதையை சீர் செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நோக்கிலும் மாவட்ட செயலக முன்றல் மற்றும் உள்ளக வளாகத்தில் பரவியுள்ள பாதீனிய நச்சுச்செடிகளை அழிக்கும் வகையிலும் சிரமதான நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
(படம்: தேவானந்தன்)

# புலமைப்பரிசில் பரீட்சை - 2023 சித்தியடைந்தோர் விபரம்

### யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

சோ.வருண்-187, பி.நேஷிக்கா-187, ஜெ.ஜீவத்-185, சு.வர்ணிதா-185, பி.அபிவர்ஷினி-185, ல.ஆதர்ஷ்-184, த.ஹரிஷான்-182, ந.துமிஸ்கா-182, சு.சுபீக்ஷினி-182, பா.நிஷாந்-182, ரா.லயஸ்ருதி-181, றூ.ஹரிசாந்-181, ச.ஸ்ரீஹரி-180, சு.அக்ஷயன்-180, பி.ஹன்சிகா-178, ச.கிரிதரன்-177, ச.விகான்-176, ச.யதுர்ஷா-176, ஜெ.அக்ஷயா-176, யூ.அன்றொயின்-176, த.கயூரிகா-175, ர.லக்ஷிகன்-175, ஜெ.ஆருக்ஷன்-175, ப.பிரதாபன்-175, ர.சங்கீர்த்தன்-175, ச.மாதவ்-174, சு.ஆகாஷ்-174, சு.கிளென் மார்ஷல்-174, அ.ஐதுஷானி-174, சி.அட்சயன்-174, அ.மனஸ்வினி-173, ஞா.யஷ்னிகா-173, ஜே.ஹன்ஸ்ரீனா-173, சு.வர்ஷனா-172, பா.ஹன்ஷிகா-171, ர.அபிஸ்னன்-171, சா.ஆதுரியா-171, ச.சாதனா-171, சி.ஹரினி-171, மா.ரிதுஷிகன்-171, சூ.ரஷேல்-171, செ.ஆஷினி-170, ஜெ.வினோசினி-170, தி.ஹஷ்மிகா ஜனி-170, வ.மிர்சிகா-170, சி.பிருத்துவிகா-170, ம.நிலாகினி-170, அ.கனலகீசனா-170, தி.இலக்கியன்-169, சி.சஸ்விகன்-169, கி.சுகர்னா-169, பி.சாருகி-169, நிருஜா-169, சு.சுலோஜன்-169, து.ரமித்தியா-169, அ.அக்ஷயா-168, சி.அபிஷனன்-168, ஜோ.கிஷ்மிஜன்-168, ர.ஷர்விகா -167, அ.அபினேஷ்-167, நி.றதிக்ஷன்-166, ச.கிளரிஷா-166, ம.அனுஷ்கா-166, கோ.சாத்விகா-166, மு.தியானா-166, தி.அக்ஷயா-165, ஜோ.மதுஸ்னிகா-165, கு.தன்மயா-165, ஸ்ரீ.அபிஷனா-165, பி.கஸ்னிகா-165, ஐ.சைந்தவி-165, சி.கௌசிகன்-164, அ.அஜினியாஸ்ரெனிஸ்-164, ம.வேணுஜன் -164, வி.பவிஷனா-164, வி.சுஞ்சனா-164, இ.சிந்துரிக்கா-164, த.கம்சிகன்-164, சி.கவீனன்-163, வி.அகஷ்திகா-163, நி.அக்ஷரன்-163, த.மதீஷ்-163, அ.விதுர்ஷா-163, தி.ராகேஷ்-163, ம.ஸஜிக்கா-163, கு.முகிபன்-162, ரா.பிரணேஷ்-162, வி.ஹயவர்த்தினி-162, ர.சுவஸ்திகா-162, சு.ஹர்ணிகா-162, ஜெ.லவினா-161, கு.லதுஷான்-161, ம.ஜெனனிகா-160, சா.மயூரா-160, தி.கயல்விழி-160, லொ.ஆதிரா-160, ந.அஷ்ருதி-160, நி.தோக்ஸ்மன் சந்துான்-159, சி.ஆதிரன்-158, ஜெ.சோபன்-158, அ.லெபோணி-158, ர.பௌத்திரன்-158, வி.தஷ்வீன்-158, க.கர்சிகா-157, நி.சிவராம்-157, ர.சங்கீத்-157, ம.ஆத்மிகா-156, த.பிளஷி பேணாட்-156, ச.தாரகி-156, ச.சுபிஸ்கா-156, வி.வீனுஜா-155, கு.அக்ஷாயினி-155, மு.அக்ஷயா-155, மு.கம்சிகன்-154, நி.பிரணீஷ்-154, சு.சுபிக்ஷன்-154, இ.அபிஸ்னா-154, அ.அஸ்விதா-154, ம.டன்ஷிகா-154, ட.கப்றிஜா-154, சி.சுபாங்கன்-154, கி.நித்தீஷ்குமார்-153, சி.தருணிகா-153, அ.வைஸ்ணவி-153, ச.ஸ்வேதா-153, கா.திஷானி-153, றொ.தரன்சிகா-152, பி.சங்கீத்-152, யோ.கவிப்பிரியா-152, பா.சதுர்சிகா-152, சி.அனுஷ்-151, வி.தனிஸ்ரன்-151, யூ.ஆன் டினோஷியா-151, நோ.வினுஸ்ரிகா-151, து.நமிந்தனா-151, ஜ.அபினாஷ்-150, கி.வைஸ்ணவி-150, கு.சுபநிதா-150, சி.வினுஜன்-150, தி.ஆரதி-150, கா.ஜனோசான்-150, ஜெ.விகாஷ்-150, ஸ்.சிவோரா-150, ரா.அவ்றி டியோன்-150, ஜெ.தஸ்விகா-149, ஜெ.தக்ஷயன்-149, கு.அக்ஷயா-148, ர.ஷாருகி-148, சு.தக்ஷாஜனன்-148, ஆ.அர்ட்சயன்-148, சி.டிதுக்ஸ்-148, மு.மதுஷா-148, ஜெ.அஸ்மிதா நிசானி-148, கா.அக்ஷனா-147, சி.தனுசியா-147, அ.ஆதேஷ்-147, ச.சாஜிசன்-147, பே.அன்ட்ரியா-147, வி.ஆரனன்-147, ந.கவிநயா-147, ர.மகதி-146, ச.லஸ்விகா-146, உ.விதுசா-145, இ.நிதுலன்-145.

### யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

த.கபினாஷ்-185, க.டிநேசன்-185, வி.சிவமிதன்-183, ரா.அபிராமி-181, இ.பிரஷாஜினி-181, ச.புவிராஜ்-178, ய.லசாந்-175, க.எட்னா-174, ம.தர்மிதா-171, ப.ஆரணா-164, சு.லயானா-165, அ.விக்னேஷ்-163, ஜெ.அஞ்சனா-163, அ.கேபின்சன்-162, உ.நிஷாரிகா-161, சு.சன்சிகா-158, யோ.சங்கீத்-158, அ.ஆசிஷ்-156, ச.அபிஸ்னா-156, நி.தமிழினி-156, சி.பூர்விஹன்-155, ய.அனுநாத்-155, க.பவிஷா - 154, மு.ஜெர்லினா-153, கோ.கர்ணிகா-153, ரா.பிரணவி-152, கி.அருஷ்-152, றொ.பிறின்சிகா-150, ர.அக்ஷிதா-149, நி.ஓவியா-149, சி.சந்தோஷிக்கா-146, ஞா.மகிஷா-145.

### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்

சி.அஜய்-170, சி.அஸ்மியா-170, ஞா.பரிதிகா-166, நி.துவமிஷா-166, க.கரிஸ்-165, ற.அபர்ணா-164, வி.அக்ஷனா-162, அ.அர்ஜிகன்-162, ர.வான்மீகா-161, இ.அபிநயா-160, சா.அபிதா-159, சு.சாகித்யா-156, க.பானுஜென்-155, ர.கம்சிகா-154, றொ.வேபிசா-154, தி.பவிஷா-154, சு.நிஷான்-152, ப.பவித்திரன்-150, செ.ஹரிகரன்-150, கே.அபிநஜா-149, ஞா.வர்ஷன்-147.

### கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியால்யம்

கே.தருஜா-196, எஸ்.அக்ஷகி-178, எஸ்.கனிமொழி-174, எம்.ஜரிசான்-173, சி.ரோகித்-172, எஸ்.ரோகிதன்-171, ஆர்.சுஜிந்தன்-170, ஆர்.அஸ்வினன்-169, வை.விதுலன்-164, வை.கஜானிகா-163, பி.விதுர்சிகன்-162, எஸ்.கதரின்-160, வி.ரோகித்-158, வி.ஜெனனி-158, எஸ்.சோபிகா-157, ஆர்.வர்சன்-157, எஸ்.ஆரபி-156, பி.கிருத்திகா-154, ரி.அபிசா-154, எஸ்.நருமிதன்-153, எஸ்.மதுசனா-153, எஸ்.யதுசா-152, வை.வர்சிகா-151, கே.கிசாகினி-150, என்.சானுயா-150, ஆர்.கிசாலன்-150, வி.பிரிந்தன் - 149, எம்.சதுரியன்-148, வி.ஜஸ்வினி-147, ஜெ.திலக்சனா-147, ரி.தருண்-145. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 415

Viber 076 636 3378



# சிங்கள ஆட்சியாளர்களின் மனம் மாறவேண்டும்

**“ தனிச் சிங்கள சட்ட மூலமே நாட்டில் இரத்த ஆறு ஓடக் காரணம் என தொழில் அமைச்சர் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் சிங்களத் தலைவர்களிடம் இவ்வாறான கருத்துக்கள் வர சுமார் 75 ஆண்டுகள் தேவைப் பட்டிருக்கிறது என்பது தான் மனவேதனை தரும் விடயம்.”**



“தலைக்குமேல் வெள்ளம் வந்த பின்னே சாண் ஏறி என்ன முழம் ஏறி என்ன” என்றொரு பழமொழியுண்டு.

செய்யவேண்டிய செயலை செய்ய வேண்டிய நேரத்தில் நேர்த்தியாகச் செய்து முடித்துவிட வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் விட்டுவிட்டு நடக்க வேண்டிய செயற்பாட்டிற்கு எதிர்மறையான செயற்பாடு நடந்த பின் அதை சரி செய்ய முற்படுவது ஒரு நாளும் நன்மையைத் தராது என்பதே குறித்த பழமொழியின் அர்த்தம்.

இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினை தொடர்பில் ஆட்சியாளர்களின் சிந்தனையும் மேற்குறித்த பழமொழியின் அர்த்தமே.

ஆம், நாடு எப்படி பிளவுற்றது? ஏன் நாட்டில் இன மோதல் ஏற்பட்டது? ஏன் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்? ஏன் சிறுபாண்மை இனத்தை ஒடுக்க வேண்டும்? ஏன் அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன? சிறுபான்மையினரும் இந்த நாட்டின் பூர்விகக் குடிகளே என்ற எண்ணம் தோன்றாதது ஏன்?

இந்தக் கேள்விகள் அனைத்தும் காலம் காலமாக வந்த ஆட்சியாளர்களுக்கு ஒரு நாளும் தோன்றியது இல்லை என்பதுதான் வேதனையான விடயம்.

இந்த நாடு சிங்களவர்களுக்கு உரித்தான நாடு. இங்கு பௌத்தம் மட்டுமே ஆதி மதம் என்ற குறுகிய சிந்தனை சிங்கள பௌத்த ஆட்சிக்கு வழிவகுத்தது.

இதுவே இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடக் காரணமாக அமைந்தது. ஆனால் இதை சிங்கள ஆட்சியாளர்கள் ஒரு போதும் ஏற்கவில்லை. இது சிறுபாண்மை இனத்திற்கும் பெரும் மனக் கவலையும், கோபத்தையும் ஏற்படுத்தியது.

அந்தக் கோபத்தின் வெளிப்பாடே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம்.

ஒரு நாட்டில் இனப்போர் ஏற்பட்டு விட்டால் அந்த நாடு அழிவது நிச்சயம்.

இதுவே இலங்கைத் திருநாட்டின் இத்துணை அழிவுக்கும் காரணகாரியமாகி நிற்கிறது.

ஆயுதப் போரில் ஈடுபட்டவர்களுடன் போரிடுவதை விடுத்து அப்பாவிப் பொது மக்கள் இலக்கு வைக்கப்பட்டதன் நோக்கம் இனவன்மத்தின் வெளிப்பாடு என்பதை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டிருந்தனர்.

இதுவே தமிழ் மக்களின் ஆட்சியாளர்கள் மீதானா வெறுப்பிற்கும் காரணமாக அமைந்துள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்து 75 வருடங்கள் கடந்து விட்டன.

ஆயினும் நாட்டில் இனங்களுக்கிடையிலான முரண் தீர்ந்ததாய் இல்லை.

இது எப்படி என்று தேடினால் அரசியல் வாதிகளின் சுயநல அரசியல் போக்கே இதற்கான காரணம் என்ற முடிவுக்கு வந்து விடலாம்.

நிலை இதுவாக இருக்கையில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதே நாடு பிளவுபடக் காரணம் என தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக் கார தெரிவித்துள்ளார். கொழும்பில் நடந்த நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந் நிகழ்வில் அவர் கூறியதாவது 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டமே நாடு இன, மத ரீதியாக பிளவடையக் காரணமாக அமைந்தது.

அரசியல் நோக்கத்திற்காகவும் பொருளாதார நோக்கத்திற்காகவும் இனவாதமும் மதவாதமும் சமூகத்தில் பரப்பப்பட்டது.

இதனை அரசியல்வாதிகள் தங்களின் சுய இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொண் டனர்.

தனிச்சிங்கள சட்டத்திற்குப்பின்னரே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். அது நாட்டில் இரத்த ஆறு ஓட காரணமானது.

இன ரீதியான நல்லிணக்கத்திற்கு நாம் ஏனைய இன, மத கலாசாரத்தை மதித்தாலே போதுமானது என அவர் தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சரின் மேற்குறித்த கருத்து வரவேற்கத்தக்கது. எனினும் இவ்வாறான கருத்துக்கள் சிங்கள தலைவர்களிடம் எழுவதற்கு சுமார் 75 ஆண்டுகள் தேவைப் பட்டிருக்கிறது என்பதுதான் மன வேதனை தரும் விடயம்.

ஆக, சிறுபான்மைத் தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு எத்தனிக்காத சிங்கள ஆட்சியாளர்கள் அவர்களை அட க்கி, ஒடுக்கி, அழித்ததே வரலாறு.


இந்த வரலாற்றை மாற்றி எழுத வேண்டியவர்களும் அவர்களே. பெரும் பான்மை ஆட்சியாளர்களின் மனமாற்றம் ஒன்றே இலங்கையில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கவல்ல நிலையை ஏற்படுத்தம் என்பது திண்ணம்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## ஆலயங்களில் ஏற்பட்ட குழப்பங்களே வழிபடு நிலை மாறக் காரணம்



**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் பரமேஸ்வரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த துயரமடைகின்றோம். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநேரம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில சித்தியடைவதென்பது எதிர்காலக் கற்றலை நிர்ணயிக்க மாட்டாது.

இலங்கையின்ர கல்வி வரலாற்றில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் மிகப்பெரிய சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள். ஆகையால, பரீட்சையில சித்தியடையாத மாணவர்கள் எந்த வகையிலும் மனம் சோர வேண்டியதில்லை. அவர்கள் தொடர்ந்து ஊக்கத்தோடு கற்றால் மிகப்பெரிய சாதனையைப் படைக்க முடியும்.

**கங்காணி:-** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆனாலும் எங்கட தீவக வலயத்தின்ர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் முன்னரை விடக் கடுமையாக வீழ்ச்சியடைந்திருக்குது.

**சாத்திரியார்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** ஓம் சாத்திரியார், தீவகக் கல்வி வலயத்தில 2021, 2022 ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்த மாணவர்களை விட, 2023 ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

**விதானையார்:-** ஓ! இப்ப தீவகத்தை அரச அதிகாரிகள் எவரும் கவனிக்கிறதில்லைத்தானே.

அப்படி ஏதேனும் அபிவிருத்தி செய்யிறதாக இருந்தால் வேலணையைச் சுற்றி ஏதேனும் நடக்கும் அவ்வளவுதான். இந்தாப் பாருங்க எத்தனையோ வருடங்களாக மண்டைதீவில இருக்கிற ஒரு குளத்தைக் கூட புனரமைப்புச் செய்யவில்லை. இதுதான் தீவகத்தின்ர நிலைமை.

**மூப்பர்:-** விதானையார் நீங்கள் இதைச் சொல்லுறியள், ஆனால் மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்குமான இணைப்பு வீதியைப் பார்த்தீங்கள் எண்டால், தீவகத்தின்ர அவலநிலை எப்படி இருக்குது எண்டது தெரிய வரும். அந்தளவுக்கு அந்த வீதி பாழடைந்து போய்க் கிடக்குது. இருந்தும் அது பற்றி எவரும் கவனிக்கிறதாக இல்லை.

**வாத்தியார்:-** எங்கட வடக்கு மாகாண அதிகாரிகள் தீவகத்திற்கு ஓரவஞ்சகம் செய்யினம். இதுதான் உண்மை.

**பண்டிதர்:-** அதுசரி, எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபர், பண்பாட்டு நிகழ்வொன்றில கலந்து கொண்டு உரையாற்றும் போது, சீரடிசாயி வழிபாடு யாழ்ப்பாணத்தில வேகமாகப் பரவி வருகுது. ஆனால் சீரடிக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அதேநேரம் எங்கட மண்ணில இருக்கிற ஆலயங்களில வழிபடுவதற்கு ஆட்கள் இல்லை. எங்கள் தவத்திரு யோகர்சுவாமிகள் பற்றி எவரும் கருசனை கொள்வதில்லை எண்டு கவலை வெளியிட்டிருக்கிறார் அல்லோ.

**சிறாப்பர்:-** யாழ்ப்பாண அரச அதிபரின்ர கவலையில நியாயம் இருக்குது. ஆனால் சீரடி சாயியின்ர வழிபாடென்பது ஆத்மார்த்தமாக அவரவரால் நடத்தப்படுகிறது.

இது நம்பிக்கையையும் மனத் திருப்தியையும் தருகிறது.

ஆனால் எங்கட சைவாலயங்கள் வழக்கிலும் பிணக்கிலும் கிடக்குது. இது தவிர, ஒவ்வொரு சிவாச்சாரியர்களும் பத்துப் பதினைந்து கோவில்களில பூசை செய்யினம். எந்த நேரம் பூசை நடக்கும் என்பது கூடத் தெரியாது.

அது தவிர, சிவாச்சாரியர்கள் சிலரின் நடவடிக்கைகள் அடியார்களுக்கு வெறுப்பைக் கொடுக்குது.

பூசை நடக்கிற நேரத்தில சிரிக்கிறது, கதைக்கிறது என்ற செயற்பாடுகள் ஆலய வழிபாட்டில அவநம்பிக்கையை ஏற்படுத்திப்போட்டுது.

இதற்கும் மேலாக, ஆலயங்களில சாதாரண பூசை முதல் திருவிழாக்கள் வரை ஏகப்பட்ட பணச் செலவுகள் ஏற்படுகுது.

பணம் உழைப்பதில கண்ணும் கருத்துமாக இருக்கிறவர்கள் இறைநம்பிக்கையை ஏற்படுத்திறதில இம்மியும் கவனம் செலுத்துகினமில்லை.

தவத்திரு யோகர்சுவாமிகள் எங்கட ஞானகுரு. அவரைப் போற்றி துதி செய்வதற்கான ஏதுக்கள், ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

அப்படியாகத் தன்னை வழிபடுவதையும் யோகர் சுவாமிகள் விரும்பவில்லை. அதனால தான் அவற்ற திருவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த நிலையில தான் ஆத்ம நாட்டம் மிகுந்தவர்கள் சாயி பாபா வழிபாட்டில் ஈடுபட்டனர். சாயி பாபாவின் மறைவுக்குப் பின்னர் சீரடிசாயி பாபாவின் வழிபாடு எங்கள் மத்தியில் வியாபகம் பெற்றுள்ளது. இது தான் உண்மை.

**கங்காணி:-** சிறாப்பர் அண்ணே! நீங்கள் சொல்லுறது உண்மைதான். ஆனால் அதற்காக எங்கட குலதெய்வங்களாக-வழிபடு கடவுள்களாக இருக்கக் கூடிய சைவாலயங்களுக்குச் செல்லாமல், அங்கு வழிபாடு நடத்தாமல் இருக்கிறது பிழைதானே.

**சிறாப்பர்:-** காங்காணியார் நான் திரும்பத் திரும்பச் சொல்லுறது ஒன்றுதான். ஆலய நிர்வாகங்களை முதலில ஒழுங்குபடுத்த வேணும். நீதிமன்றத் தீர்ப்பில தான் ஆலயக் கொடியேற்றம் நடக்கிறதாக இருந்தால், சனங்கள் தங்கட வழிபாட்டை மாற்றிக் கொள்ளுவினம். அதுபோல பூசை வழிபாடுகளை நடத்துகிறவர்கள் செப்படி வித்தை காட்டினால், சனங்க்ள் அங்க இருந்து விலகும்.

**மூப்பர்:-** அப்ப இதற்கு என்னதான் செய்யிறது.

**சிறாப்பர்:-** எங்கட யாழ்ப்பாண அரச அதிபர் சமூக நலன்மீது அதீத அக்கறை கொண்டவர். ஆகையால, அவர் ஆலய நிர்வாகிகளையும் சிவாச்சாரியர்களையும் அழைத்து ஆலய வழிபாட்டிற்கு மக்கள் வருவதை எப்படி ஊக்குவிக்க முடியும் என்பது பற்றி ஆராய வேணும்.

அதோட அடியவர்களையும் அழைத்தால், அவர்களும் ஆலயங்களில உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுவினம்

இப்படி சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### தமிழ்-சண்டிலிப்பாய்

**இன்றைய காலகட்டத்தில் தமிழ் இளைஞர்களுக்கு ஏதாவது நல்வழி கூற முடியுமா வியாசரே?**

இது நவீன உலகம். இந்த நவீன உலகில் பிறக்கும் பிள்ளைகள் நவீனத்துடன் ஒன்றியிருப்பார்கள் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இல்லை.
போதை வஸ்துக்கு அடிமையாவதும் பெற்றோரையும் மற்றோரையும் மதியாமல் தறுதலையாகத் திரிவதும், அதி வேகமாய் மோட்டார் சைக்கிள் ஓடுவதும் இடம், பொருள், ஏவல் அறியாது நடந்து கொள்வதும் ஒரு நாளும் நவீனமாக அமையாது.
இதைப்புரிந்து கொண்டால் மாத்திரமே நீங்கள் முன்னேறலாம் இல்லையேல் அழிவு நிச்சயம்.

### வலம்புரி வாசகர் - யாழ்ப்பாணம்

**களவும் கற்று மற என்பதற்கு சரியான அர்த்தத்தை விளக்க முடியுமா?**

ஒரு எழுத்துப்பிழை பழமொழியின் அர்த்தத்தையே மாற்றியமைத்து விட்டது.
"களவும் கவறு மற" என்பதே சரியான பழமொழி.
கவறு என்பது சூதாடுதல் என்பதாகும்.
அதாவது களவு சூதாட்டம் என்பவற்றை மேற்கொள்ளாதே என்பதே இந்தப் பழமொழியின் உண்மையான அர்த்தம்.
"கவறு" என்பதற்கு பதிலாக "கற்று" என எழுதியதனால் வந்த வினை இது.
கடந்த வாரம் இதற்கான பதில் நகைச்சுவைக்காக எழுதப்பட்ட பதில்.

### சுரேசன்-பத்தமேனி

**இலங்கையில் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை சார்ந்த பல்கலைக்கழகம் அமைய இருப்பதாக தகவல்கள் உண்மையானதா?**

நல்ல விடயம். வரவேற்கத்தக்க விடயம். இயற்கை அனர்த்தத்தினால் வருடத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்து போகின்றனர்.
அந்த வகையில் சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் தொடர்பில் பல்கலை அமைவது நாம் முன்னேற்றமடைவதற்கு வளி வகுக்கும் என்பது திண்ணம்.
பட்டம் முடித்தால் அரச வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை பட்டதாரிகள் கைவிட்டு தனியார் துறையிலும் சாதிக்கலாம் என்பதை நம்பினால் பலன் உண்டு.

### சுதன்- குப்பிளான்

**உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்னராவது கொள்ளையடிக்கப்பட்ட மக்கள் பணம் மக்களுக்கு மீண்டும் கிடைக்குமா?**

அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்களே.
பிறகென்ன கதை. தம்பி நீங்கள் சத்திர சிகிச்சைக்கு வந்தீர்கள். உங்களுக்கு வெற்றிகரமாக சத்திர சிகிச்சை முடிந்து விட்டது.
இனி உங்கள் உடலில் உயிர் இருக்கா இல்லையா என்று பார்க்க வேண்டியது எமது வேலை இல்லை.
என்ன புரிகிறதா?

### மகாலட்சுமி- கொக்குவில்

**எப்படி இருந்த இலங்கைக் கிரிக்கெட் அணி இப்படி ஆகிவிட்டதே?**

அதற்கு நாம் என்ன செய்ய முடியும்.ஊழல் நிறைந்த நாட்டில் அனைத்திலும் ஊழல் இருக்கும் தானே. அதில் வியப்பிற்கு ஏதும் இல்லை.ஈழத்தில் தமிழினம் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழினம் என்றே ஒன்றுக்காக அந்த இனம் அழிக்கப்பட்டதும் ஒதுக்கப்பட்டதும் ஏற்க முடியாத ஒன்று.
இன்றைய இலங்கையின் நிலைக்கு தமிழினத்தின் கண்ணீர் முக்கிய காரணமாக அமைகிறது.
" ஏழை அழுத கண்ணீர் கூரிய வாழுக்குச் சமம் " என்பதை இனியாவது புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

### மதுவன்- மீசாலை


**உலகக் கோப்பையை வெல்லும் அணி எது என்று நினைக்கின்றீர்கள் வியாசரே?**

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா- இந்தியா இன்று பலப்பரீட்சை நடத்துகின்றது.
இரு அணிகளும் மிக பலம் பொருந்திய அணிகள். அவுஸ்திரேலியா அதிக முறை உலகக்கிண்ணத்தை வென்ற அணியாக உள்ளது.
இந்தியா நடப்பு ஆட்டத்தில் விளையாடிய பத்து போட்டிகளில் ஒன்றில் கூட தோற்கவில்லை. அனைத்திலும் வெற்றி கண்டு இறுதிக்கு முன்னேறியிருக்கிறது.
இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு இந்தியாவுக்கு சற்று அதிகம் எனலாம்.

### விஜயதரன்- உரும்பிராய்

**இலங்கை கிரிக்கெட்டிற்கு சர்வதேசம் விதித்த தடை எப்பேற்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் வியாசரே?**

ஒரு சாதாரண கிரிக்கெட் அணியைக் கூட சரியாக வழிப்படுத்த முடியாத இலங்கை ஆட்சியாளர்களா, தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்கள் என்ற செய்தியைச் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறியிருக்கிறது இலங்கை அணி மீதான சர்வதேச தடை.
1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று இலங்கை என்ற நாட்டை அடையாளப்படுத்தியது இலங்கை அணி.
அந்த அணிக்கு இந்த நிலையா என்று எண்ணும் போது வெறுப்பே மேலோங்கி நிற்கிறது.



“இலங்கை கிரிக்கெட்டிற்கு சர்வதேசம் விதித்த தடை எப்பேற்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் வியாசரே?

விஜயதரன்- உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஆண்டவன் கட்டளை
இசை:எம்.எஸ்.விஸ்வநாதன் ரு ராமமூர்த்தி
பாடியவர்: டிஎம்ஸ் – பி.சுசீலா



நாணலிலே காலெடுத்து நடந்து
வந்த பெண்மை இது
நாணம் என்னும் தென்றலிலே
தொட்டில் கட்டும் மென்மை இது..

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

காற்றினிலும் மழையினிலும்
கலங்கவைக்கும் இடியினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் வாழும்–ஒஹோய்

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
தென்னை இளங்கீற்றினிலே...
தென்னை இளங்கீற்றினிலே தாலாட்டும்
தென்றல் அது
தென்னை அதை சாய்த்து விடும்
புயலாக வரும்பொழுது

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிக்கும் நாணலது
காற்றடித்தால் சாய்வதில்லை
கனிந்த மனம் வீழ்வதில்லை

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

ஓ...
நாணலிலே காலெடுத்து நடந்து
வந்த பெண்மை இது
நாணம் என்னும் தென்றலிலே
தொட்டில் கட்டும் மென்மை இது..
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

அந்தியில் மயங்கி விழும் காலையில் தெளிந்து விடும்
அன்பு மொழி கேட்டு விட்டால் துன்ப நிலை மாறிவிடும்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
காற்றினிலும் மழையினிலும்
கலங்கவைக்கும் இடியினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் வாழும்–ஒஹோய்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

# விநோத விளையாட்டுக்கள்

இன்றைய நவீன காலத்திலும் பழமை மாறாமல் அன்பும் ஆனந்தமும் பொங்க ஆரவாரத்துடன் ஊரே கூடிக் கொண்டாடும் உலகளவிலான வித்தியாசப் பண்டிகைகள் இங்கே...

### முடியை உறைய வைக்கும் கனடா

பனிப் போர்வையால் மூடப்பட்டிருக்கும் தேசம் கனடா. ஒவ்வோர் ஆண்



டும் போட்டி போல நடைபெறும் இந்த விநோதமான திருவிழாவில் மக்கள் தங்கள் தலைமுடியை விதவிதமான வடிவத்தில் உறைய வைக்கிறார்கள். சிறந்த டிசைனுக்குப் பரிசுகளும் உண்டு. தலைமுடியை மட்டும் நனைத்துவிட்டு, வெந்நீருக்குள் நிற்கிறார்கள். வெளிப்புற வெப்பநிலை மைனஸ் 20 டிகிரியாக இருப்பதால், ஈரமான முடி சிறிது நேரத்திற்குள் மரக்கிளை போல உறைந்து விடுகிறது.

### ஹாங்காங்கின் பன் திருவிழா

பன் திருவிழா என்றதும் சாதாரணமாக பன் சாப்பிடும் போட்டி என்று எண்ணிவிடாதீர்கள். நூறு ஆண்டுகளுக்கு முன் ஹாங்காங்கில் பிளேக் நோய் முடிவுக்கு வந்தபோது தொடங்கிய இந்த நிகழ்வு இப்போது ஒரு கலாசார விழாவாக உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது. பங்கேற்பாளர்கள் 60 அடி உயரத்தில் உள்ள மூங்கில் கம்பத்தில் ஏறி, முடிந்தவரை பன்களை எடுத்துத் தங்கள் முதுகிலிருக்கும் பையில் சேகரிக்க வேண்டும். அதிக பன்களைக் கவர்ந்தவர் வெற்றி பெறுகிறார்.




### ஆஸ்திரியாவின் உடல் ஓவியத் திருவிழா

ஒருவரை மாடலாக நிற்க வைத்து அவரது முகத்தை ஓவியம் ஆக்கினார்கள். அல்லது அவரையே முழுப்படமாக வரைந்தார்கள். அதற்கு அடுத்ததாக தங்கள் முகத்தில் ஓவியங்கள் வரைந்து வித்தியாசமாக உலவினார்கள். இவை எல்லாவற்றையும் தாண்டி உடலையே கேன்வாஸாகப் பயன்படுத்தி ஆஸ்திரியாக்காரர்கள் நடத்தும் உடல் ஓவிய விழாவில் எல்லோர் மீதும் வண்ணங்கள் தெறிக்கின்றன. அசத்தலான வண்ணங்களின் கலவையாக உடல் மாறிவிடுகிறது. உடல் ஓவியர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பாக இதைக் கொண்டாடுகிறார்கள்.

### குழந்தைகளை அழவைக்கும் ஜப்பான்

குழந்தைகள் செய்யும் சேட்டைகள் பிடிக்காது என்றால் இந்தத் திருவிழா உங்களுக்கானதுதான். ஜப்பானில் குழந்தைகளை அழவைப்பதற்காகவே இந்த விழாவை நடத்துகிறார்கள்.

இதில் சுமோ வீரர்கள் போட்டியாளர்களாகப் பங்குபெறுகிறார்கள். குழந்தையை முதலில் அழ வைப்பவரே வெற்றியாளர். 600 ஆண்டுப் பாரம்பரியம் கொண்ட இந்த விழாவில் பங்கேற்று அழும் குழந்தைகளுக்கு எந்தத்



தீமையையும் தடுக்கும் ஆற்றல் வந்துவிடும் என்று நம்பப்படுகிறது.


### எல் சால்வடாரின் நெருப்புப் பந்து

பிரபல தொலைக்காட்சித் தொடரான F.R.I.E.N.D.S இன் ஒரு எபிசோடில், ஜோயியும் சாண்ட்லரும் இந்த ஃபயர்பால் விளையாட்டை விளையாடுவார்கள். அதுபோலவே, எல் சால்வடாரில் 1658 ஆம் ஆண்டு வெடித்த எரிமலையின் நினைவாக தீப்பந்தங்களை வீசும் விழா நடக்கிறது. தனித்துவமான இந்தத் திருவிழாவில் அப்பகுதி மக்கள் இரு அணிகளாகப் பிரிந்து தகுந்த பாதுகாப்பு உபகரணங்களுடன் நின்றபடி, எரியும் தீப்பந்தங்களை ஒருவர் மீது ஒருவர் வீசிக் கொள்கிறார்கள். நிச்சயமாக இது பெரியவர்களுக்கான விளையாட்டு மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 உலகக் கிண்ணத்தை வெல்லப்போவது யார்?




2023 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பை இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் கோப்பைக்காக இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன. இரு அணிகளும் மிகப் பலம் பொருந்திய அணியாக திகழ்ந்து வருக வந்தாலும் இந்திய அணி கிண்ணத்தை வெல்ல வாய்ப்பிருப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியா இதுவரை 2015, 2007, 2003, 1999, 1987 ஆம் ஆண்டுகளில் உலகக்கிண்ணத்தை வென்று முதல் நிலையில் இருக்கிறது.


இந்திய அணி 2011, 1983 ஆம் ஆண்டுகளில் உலகக்கிண்ணத்தை வென்று மூன்றாவது நிலையில் இருக்கிறது.

உலக கிரிக்கெட் ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான இன்றைய இறுதியாட்டத்தில் கிண்ணத்தை வெல்லப் போவது இந்தியாவா? அவுஸ்திரேலியாவா?என்பது இன்றைய தினம் இரவு தெரிந்துவிடும்.

2023 நடப்பு உலகக்கோப் பையில் அதிக தாக்கத்தை ஏற் படுத்திய டாப் 5 வீரர்கள் யார் யார் என்பதை இங்கே பார்க்க லாம்.

## விராட் கோலி

லீக் சுற்றுகளின் முடிவில் அதிக ரன் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார் கோலி. களில் 594 ரன்களை விளாசியிருக்கிறார். வரை நான்கு உலகக்கோப்பைத் தொடர்களில் ஆடியிருக்கும் விராட் கோலி முதல்முறையாக ஒரு தொடரில் 500 ரன்களைக் கடந்திருக்கிறார். ரன்களைத் தாண்டி, தனது நேர்த்தியான இன்னிங்ஸ்கள் மூலம் அணிக்கு அவர் கொடுக்கும் நம்பிக்கையும் உத்வேகமும் பெரிது. அவுஸ்திரேலியர்விற்கு எதிராக தடுமாற்றத்துடனே இந்திய அணி தனது பயணத்தைத் தொடங்கியது. அன்றே விராட் கோலி மீட்பராக உருவெடுக்கத் தொடங்கினார். ராகுலுடன் நல்ல பார்ட்னர்ஷிப் அமைத்து அந்தப் போட்டியையே தலைகீழாக மாற்றி வெல்ல வைத்திருந்தார். கோலி பற்ற வைத்து உயிரூட்டிய நம்பிக்கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இந்தியா அதற்கடுத்த



அத்தனை போட்டிகளையும் வென்றது. கே.எல். ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் என மிடில் ஆர்டரில் தன்னுடைய சகாக்கள் அத்தனை பேருடனும் ஒருங்கிணைந்து, அணியின் வெற்றிக்குத் தேவையான அத்தியாவசிய கூட்டணிகளைக் கச்சிதமாக அமைத்திருக்கிறார். இது அவரின் கடைசி உலகக்கோப்பையாகவும் இருக்கலாம். அப்படி இருக்கும்பட்சத்தில் தனது கரியருக்கான ஆகச்சிறந்த க்ளைமாக்ஸை கோலி எழுதி முடித்திருக்கிறார் என எடுத்துக்கொள்ளலாம்.

## முகமது ஷமி

உலகக்கோப்பையில் இந்தியா சார்பில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பௌலர் எனும் சாத னையை மிகக்குறைந்த போட்டிகளிலேயே செய்து முடித்திருக்கிறார் முகமது ஷமி. லீக் சுற்றில் தான் ஆடிய 5 போட்டிகளில் 16 விக்கெட்டுகளை வீழ்த் தியிருக்கிறார். இரண்டு போட்டிகளில் ஆட்டநாயகன் விருதையும் வென்றுவிட்டார்.

இத்தனைக்கும் அவர் அணியின் முதல் சாய்ஸ் பௌலராகவும் இருந்தி ருக்கவில்லை. முதல் 4 போட்டிகளில் பென்ச்சில் இருந்த அவரை இந்திய அணி கவனிக்கவே இல்லை. ஹர்திக் பாண்டியா காயமடைந்த போது தான் ஷமியை உள்ளே கொண்டு வந்தார்கள்.

உள்ளே வந்த முதல் போட் டியிலேயே நியூசிலாந்துக்கு எதிராக 5 விக்கெட்டுகளை வீழ்த்தி, தவிர்க்கவே முடியாதவராக மாறிவிட்டார். 'நான் அணியில் இல்லை என்பது கடினமான விஷயம் தான். ஆனால் அணி நன்றாக ஆடிக்கொண்டிருக்கிறது. அது போதும். ஒருவரின் வெற்றிக்கு மற்றவர் மகிழ்ச்சியடைய வேண்டும்' என தான் அணியில் இல்லாத ஏமாற்றத்தையும் பக்குவமாக எதிர்கொள்ளும் வல்லமை ஷமியிடம் இருந்தது. ஒரே போட்டியில் என்றில்லாமல் களமிறங்கும் ஒவ்வொரு போட்டியிலும் சீராக விக்கெட் வேட்டை நடத்தி வருகிறார்.

## ஹஸ்மத்துல்லா ஷகிதி

பட்டிங், பௌலிங் என்பதையெல்லாம் கடந்து பல இன்னல்களுக்கு மத்தியில் வளர்ந்து வரும் ஒரு அணியை உத்வேகத்துடன் வழிநடத்தியதற்காகவே ஹஸ்மத்துல்லா ஷகிதிக்கு இந்தப் பட்டியலில் இடம் கொடுக்கலாம். இந்த உலகக்கோப்பைக்குள் நுழையும் போது ஆப்கானிஸ்தான் மீதிருந்த பார்வையும் உலகக்கோப்பை முடிகிற சமயத்தில் இருந்த பார்வையும் முற்றிலும் வேறாக இருக்கிறது. இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை போன்ற முன்னாள் சம்பியன்களை எந்தச் சிரமமுமின்றித் தோற்கடித்திருக்கின்றார். அவுஸ்திரேலியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் தோல்விப் பயத்தைக் காட்டிவிட்டார்.

ஏறக்குறைய வெறும் 20 ஆண்டுகால கிரிக்கெட் வரலாற்றை மட்டுமே கொண்டிருக்கும் ஓர் அணி, தங்களுக்குப் பின்னால் எந்த வழமையும் இல்லாமல் இப்படி ஒரு சாதனையைச் செய்வது அதிசயத்திலும் அதிசயமே. அணியின் கப்டனாக முன்னின்று இப்படி ஒரு சம்பவம் நிகழக் காரணமாக இருந்ததில் முக்கிய பங்காற்றியவர் ஷகிதிதான். அணிக்கான உந்து சக்தியாக, எரிபொருளாக தங்கள் மக்கள் எதிர கொள்ளும் இன்னல்களையே முன்னிறுத்தினார் ஷகிதி. ஆப்கானியர்களின் வலியை அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக ஆட வேண்டும் என்கிற எண்ணத்தை அணியின் ஒவ்வொரு வீர்ரின் மனத்திலும் விதைத்தார். கிடைத்த ஒவ்வொரு வெற்றியையும் அவர்களின் மக்களுக்காக மட்டுமே அர்ப்பணித்தார். உலக அரங்கில் தங்கள் மக்களின் வலியைத் தங்களின் வெற்றியின் வழி எடுத்து வைக்க முயன்றதற்காகவே ஷகிதியை இந்த உலகக் கோப்பையின் சிறந்த தலைவன் எனக் கூறி விடலாம்.

## ரச்சின் ரவீந்திரா

நடப்பு உலகக்கோப்பையில் மிகவும் இளமையான வீரர்களில் ரச்சின் ரவீந்திராவும் ஒருவர். டிரெண்டுக்கேற்ப ஆடி அசத்தியிருக்கும் 2கே கிட்ஸ். முதல் போட்டி யிலேயே இங்கிலாந்துக்கு எதிராக சதமடித்துத் தன் வருகையை அறிவித்தார். இதில் கவனிக்க வேண்டிய விடயம், நியூசிலாந்து அணிக்காக முன்னதாக அவர் டாப் ஆர்டரிலோ ஓப்பனிங்கிலோ ஆடியதே இல்லை. அப்படிப்பட்டவரின் திறமை மீது முழு நம்பிக்கை வைத்து சர்ப்ரைஸ் ஓப்பனராக்கியது நியூசிலாந்து. இந்த ஒரு முடிவு நடப்பு உலகக் கோப்பையில் அந்த அணியின் போக்கையே மாற்றியது. பல வீரர்களும் காயமுற்றதால் நியூசிலாந்து அணிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அவற்றையெல்லாம் ஈடுகட்டும் வகையில் ரச்சின் ரவீந்திரா சுழன்றடித்தார். அறிமுக உலகக்கோப்பையிலேயே 500 ரன்களுக்கும் அதிகமாக அடித்து அத்தனை எதிரணிகளையும் இவருக்கெனத் தனித்திட்டம் தீட்டும் இடத்தை நோக்கி நகர்த்தியிருக்கிறார். ராகுல் டிராவிட் + சச்சின் கலவையாக வைக்கப்பட்டிருக்கும் அவருடைய பெயருக்கு ஏற்ற அடையாளத்தை இந்த உலகக்கோப்பையில் உருவாக்கிவிட்டார்.

## மார்கோ யான்சென்

நடப்பு உலகக்கோப்பையில் மிகப்பெரிய சர்ப்ரைஸாக அமைந்தது தென்னாபிரிக்க அணிதான். இந்தியாவைத் தவிர்த்து இந்தத் தொடரை மிகச்சிறப்பாக அணுகியிருக்கும் அணி தென்னாபிரிக்காவே. அவர்களின் தொடர் வெற்றிக்கு மிக முக்கிய காரணம், அவர்களின் வேகப்பந்து வீச்சே. அதிலும் குறிப்பாக மார்கோ யான்செனைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். லீக் சுற்றில் 8 போட்டிகளில் 17 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். இந்தியாவிற்கு எதிரான போட்டியைத் தவிர மற்ற எல்லாப் போட்டிகளிலும் எக்கனாமிக்கலாகவும் வீசி விக்கெட்டையும் வீழ்த்தியிருக்கிறார். இதில் கவனிக்க வேண்டியது அவரின் கன்ஸிஸ்டன்சியே. இந்தச் சீரான தன்மைதான் அவரை மற்றவர்களிடமிருந்து தனித்துக் காட்டுகிறது. நாக் அவுட்டிலும் தென்னாபிரிக்க அணியின் வெற்றிதோல்விகளைத் தீர்மானிக்கக்கூடிய இடத்தில் யான்சென் கட்டாயம் இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகைக் காரிகைக்கு ஆரத்தி காட்டிடுவோம்



கார்த்திகைக் காரிகை வருகி(றா)ற நாளை
ஆரத்தி காட்டி அணிந்திடுவோம் மாலை

கார்த்திகை போனால் கடும்மழை இல்லையாம்
வார்த்தையில் வடிக்கிறான் திரைக் கவிமுத்தன்
கார்த்திகை மாதத்துள் மரம்நடும் பணியை
பூர்த்தி ஆக்கிடச் சேர்த்திடுவோம் அணியை

மாசில் வளியை மழைதரு முகிலை
சூழல் மாறா வெப்பத் தரும்தா வரத்தை

பெருஞ்சமர் போரிடர் பேரிடர் பெருந்தொற்றில்
யாரெவர் இறந்தாலும் எங்கள் அருஞ்சனத்தில்

மாண்டவரை, ஆண்டவரை மறவாமல் நினைந்து
நடுகை செய்வோம் மரமாக இருகையிலேந்தி

மகேசன் கஜேந்திரன்.

## முதுமை பேணுவோம்

வாழும் பண்பாடு
வாடி விட்டதோ?
புதிய தளிரும் சருகாகும்
மழைநீரில் காட்டாறு
கரை புரண்டாலும்
கோடை வெம்மையில்
கால்சுடும் மணல் தரும்
வாலிபத்தின் நிமிர்நடை
வயோதிபத்தில் கூனிவிடும்
அன்பிற்காய் தவமிருப்போரை
அன்பெனும் வரம் தருவோம்
அன்பை விதைத்து
அன்பை அறுவடை செய்ய



தமிழினியன், வவுனியா.

## கார்த்திகை மலர்

எம்நில அவலம் கூறிடும் மலராய்
மலர்ந்திடும் கார்த்திகை வீர மலராம்

ஒருமலர் கூறிடும் ஓர் இன நினைவை
கண்டிடும் எம்மனம் கலங்குதோ இன்றும்

உரமாய் விதைந்த வீரம் யாவும்
மலராய் மண்ணில் மலர்ந்திட கண்டு

கனவாய்ப் போன எம் இன உரிமை
கனவாய் எரியுது காரிருள் தீபமாய்

அறிந்திடும் நினைவுகள் விழிகளை நனைக்க
அறியா நினைவுகள் மண்ணிலில் உறைந்திட

கதிரவன் கண்முன் நடந்த அவலம்
சாட்சிகள் இல்லா கதையாய் கரையுது


கானகம் நிறைந்த கார்த்திகை மலர்கள்
காவிய கதிராய் கண்முன் ஒளிர

எம்நில தேசிய மலரின் புகழினை
மறவோம் என்றும் மறைந்திடும் நொடி வரை



ந. விதுசன்,
கற்கோவளம்.

## மௌனத்தின் தேடல்- 694




## சமநிலை தவறிவிடாதே!

ஓடிஓடி உழைக்கும்
கடும் தொழில் மனிதா!
கவனம்... நீ நடக்கும் பாதை
கரடுமுரடானது - அதில்
சமநிலை தறவிவிடாதே-அது
உன் சரித்திரத்தையே முடித்துவிடும்.

இ.உதிஸ்ரன்,
மாவிட்டபுரம்.

## மௌனத்தின் தேடல்- 695



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## ஊருக்குபதேசம்!

ஊருக்கு உபதேசம் சொல்வது
சுலபம் என்பதை
நமக்கு பிரச்சினை வரும் போது
உணர்ந்து கொள்ளலாம்
இங்கு இந்த
இருவரின் நிலையும் அதுவே!

சித்தங்கேணியூரான்.

## பகீரத்தனம்

நீயா நானா என்னும் போட்டி
மலைமுகட்டில் ராட்டனமாடுவது
நீதியின் தராசை நினைவூட்டும்
விதிகளை மீறி ஒரு பகுதியினர்
அஞ்சுவதையும் புறம் தள்ளிவிட்டு
இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்டு
குறுக்கு வழியில் குறுகிய காலத்தில்
பெரும் செல்வத்தை குவிக்கும் செயல்
வரவு செலவுத் திட்டத்தை பாதிக்கும்
பெரும் துண்டும் விழச் செய்யும்
இதை ஈடு செய்து சமப்படுத்துவதும்
வகை தொகை பகீரத்தனமாகும்.

க.நாகராசா,
நுணாவில்.

## நாட்டாண்மை

முதலாளித்துவ வர்க்கம் செய்யும்
மூர்க்கத்தனமான செயலைத்தான் என்ன என்பீர்
துருவங்கள் இரண்டும் இணையுமா?
துன்பத்தில் துவண்டு எழத்தான் முடியுமா?
நாட்டாண்மை உள்ளவரை
நாட்டில் சுபீட்சம் ஏற்படத்தான் வழியுண்டா?
பாதாளத்தில் விழ வைக்கும்
பாதகரின் பரிநாசச் செயலை எண்ணும் போதே
பாரினில் மகிழ்ச்சிக்கு ஏது இடம்?

ஆ.செல்வி,
திருநாவலூர்.

## வெறியர் கேளார்

முதல்வனாகும் வெறியுடன்
மல்லுக்கட்டும்
திமிர் மிகு சக்திகளால்
எல்லா மாந்தரும்
பாதாளத்தில் வீழ்ந்து மடிய
என்றோ ஓர்நாளில்
பூமி சூனியமடையலாம்
கற்றோரினதும்
சமூகவியலாளரினதும்
எச்சரிக்கையாகும்.

சி.இ.அன்புதுரை,
மானிப்பாய்.

## துலாபாரம்

குற்றித் தூள் கல்லில் சமாந்தரமாய் பலகை வைத்து
இரு பக்கமாக இருந்து விளையாடிய சிறு வயது
விளையாட்டை இப்போ குன்றின் மேல்
சமாந்தரமாக கோலொன்று வைத்து சமநிலையில் நின்று
ஆடிப் பார்ப்பது தான் துலாபாரமோ?

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

"அறிவீனர்கள்தான் அப்படிச் சொல்வார்கள்." பதிலிறுத்தான் படைத் தலைவன்.

"அப்படியா?"

"சந்தேகமென்ன?"

"உங்களுக்குச் சந்தேகமில்லை போல் இருக்கிறது"

"எனக்கென்ன யாருக்குமே இருந்ததில்லை. வேதத்துக்கு இருந்ததில்லை, சாத்திரத்துக்கு இருந்ததில்லை. புராணங்களுக்கும் இருந்ததில்லை. பெண் குலம், தாய்க்குலம்."

"அது சரிதான்" மீண்டும் சிரித்தாள் அவள்.

"நகைப்பதற்கு ஏதுமில்லை மஞ்சளழகி. தெய்வத்துக்கு அடுத்தபடியாகத் தாய்க்குலத்தை வணங்கும்படி வேதம் சொல்லுகிறது. "மாத்ரு தேவோ பவ. பித்ரு தேவோ பவ. ஆசார்ய தேவோ பவ" என தாய்க்குலத்துக்கு முதலிடத்தையும் தந்தைக்கு இரண்டாமிடத்தையும் குருவுக்கு மூன்றாமிடத்தையும் வேதமளிக்கிறது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனத் தமிழ் மூதுரையும் உண்டு" என்று சுட்டிக்காட்டினான் படைத்தலைவன்.

"கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது," என்றாள் மஞ்சளழகி.

"எங்கள் நாட்டில் செயலிலும் அது உண்டு"

"எது உண்டு?" என்று கேட்டாள் அவள்.

"தாய்க்குலத்தை மதிக்கும் வழக்கம்."

களவொழுக்கமும் அந்தச் செயலில் ஒன்றா?"

"மஞ்சளழகி" கோபத்துடன் எழுந்தது இளையபல்லவன் குரல்.

"கோபிக்காதீர்கள். உங்கள் நாட்டு இலக்கியத்தைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் நான் கேட்டிருக்கிறேன். காதலின் வழியில் களவொழுக்கம் சிலாகிக்கப்படுகிறது. உங்கள் இலக்கியத்தில் தாய் தந்தையர் அறியாமல் தலைவியைத் தலைவன் சந்திப்பது உயரிய காப்பியமென்று கூறப்படுகிறது. அவன் கைவிட்டால் அவள் கதியென்ன வென்பதை யார் யோசித்தார்கள்? முதலில் கோவலன். கண்ணகியைப் புறக்கணித்த போது அவள் கதியென்ன? பிறகு மாதவியைக் கைவிட்டபின் அவள் கதியென்ன? இருவர் கதியும் விரும்பத்தக்கதல்ல படைத்தலைவரே? அது மட்டுமா? வேதம் சொல்லிவிட்டுச் சென்றது பெண் குலத்தின் உயர்வை. ஆனால் பெருவியாதிக் கணவனை வேசி வீட்டுக்கு மனைவி சுமந்து செல்ல வேண்டிய அவசியத்தையும் அரக்கனிடம் அவதிப்பட்ட மனைவியை அக்கினியில் விழச் சொன்ன பெருமையும் ஊர் வம்புக்காகக் கர்ப்பிணியைக் காட்டுக்கு ஓடச் சொன்ன உன்னதத்தையும் புராணங்கள் வர்ணிக்கின்றன. புராணங்கள் புகழ்வது தான் நடைமுறை படைத்தலைவரே? பெண் ஜன்மம் கேவலமானது. ஆடவனுக்கு ஆடும் பாவை. பெண்ஜன்மம் கணவனுக்குக் கைப்பொம்மையின் நிலைதான் கட்டிக்கொண்டவள் நிலை. அவளுக்குச் சுதந்திரம் கிடையாது. சுயவாழ்வு கிடையாது. அவள் பரந்தந்திரை என்று உங்கள் சாத்திரங்கள் கோஷிக்கின்றன. ஆனால் ஒன்று பார்த்தீர்களா?




"என்ன மஞ்சளழகி?"

"இத்தகைக்குப் பிறகும் புருஷனுக்கு அடிமையாயிருப்பதையே பெண் விரும்புகிறாள்"

## பெண் ஜென்மம்

"உண்மையாகவா?"

"ஆம். புராணத்தைப் பாருங்கள் விதேகன் குமாரியை விடுவிக்கிறேன் என்று தூதன் துடித்த போது எனக்குச் சுதந்திரமில்லை உன்னுடன் வர அவர் வந்து விடுவிக்கட்டும்' என்று சிறையிலேயே கிடந்தாளே அந்தப் பெண்."

"ஆம் கிடந்தாள்."

"அதுதான் உண்மை நிலை படைத்தலைவரே! இயற்கையே பெண்களுக்கு விரோதி. ஆண்களுக்கு அடிமை யாக அவர்களைப் படைத்திருக்கிறது. ஆகவே பெண் ஜன்மம் மட்ட ஜன்மம். இல்லையேல்..." மேலே ஏதோ சொல்லப் போனவள் சட்டென்று பேச்சை நிறுத்தினாள்.

"சொல் மஞ்சளழகி," என்று கேட்டுக் கொண்டான் இளையபல்லவன்.

"இயற்கை அப்படியில்லையேல் நான் என்ன செய்து கொள்ள வேண்டும் தெரியுமா?"

தெரியவில்லை எனக்கு

(தொடரும்...)


---

## கவி வாசகம்

மணிவாசகரை வியந்து

"தத்துவ முறைகளைக் கற்றுத் தெளிந்து அவற்றைப் பின்பற்றினால்தான் இறைவனை அடைய முடியும் என்ற நிலையினை மாற்றி எப்பொழுதும் இறைவனை நினைத்துக் கெண்டே நித்தியகர்மங்களில் ஈடுபட்டாலே அந்நிலையை அடையலாம் என்ற கொள்கை பரவியது."

(திருவாசகத் தமிழ் கருத்தரங்குக் கட்டுரை - 1972)



என்கிறார் டாக்டர் முத்துச் சண்முகம் அவர்கள்.

**"வான் கலந்த மாணிக்க**
**வாசகநின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால்**
**நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால்கலந்து**
**செழுங்கனித் தீஞ் - சுவைகலந்து**
**ஊன்கலந்து உயிர் கலந்து**
**உவட்டாமல் இனிப்பதுவே."**

என்ற இராமலிங்கர் பாடல், திருவாசகத்தின் பெருமையை மிகைப் படுத்தியன்று அதன் பெருமைகளைத் தொகைப்படுத்தியே பேசுகிறது.

சமய இலக்கியப் படைப்பாளிகளில் மாணிக்கவாசகர் என் நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார்.

அவரது பக்திக் கொள்கை அந்தக் காலத்தின் தேவை என்பதைப் புரிந்து கொண்டு அவரை அணுகினால், அவர் ஒரு மாபெரும் கவிஞர் என்பதை அவரது சத்தியச் சொற்கள் மனசுக்குள் வந்து பறையடிக்கின்றன.

அவரது அனுபவம் மெய்- அவரது உணர்வு மெய் - அவரது தவிப்பு மெய்.

ஒரு காதலனின் தவிப்போடு ஒப்பிட்டு அவரது பக்தியின் தவிப்பைப் புரிந்து கொள்ள முயல்கிறேன்.

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 30

### பாரதியின் பின்புலங்கள்

தமிழின் இலக்கிய வரலாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் தனது கவிதைக் கொள்கையில் (The Concept of poetry) புதிய புதிய உள்ளடக்கங்களையும் உருவகங்களையும் சந்தித்திருக்கிறது.

நான்கு வரிகளிலே அடிமன உளைச்சலைச் சித்தரித்துக் காட்டிய சங்கப் புலவனும் - ஏழு சீர்களில் உலகளந்த வள்ளுவனும் - ஆசிரியப் பாவால் சிலம்பிசைத்த இளங்கோவும் - விருத்தத்தைத் தொடங்கியும் புதுக்கியும் காட்டிய திருத்தக்க தேவனும், கம்பனும் - தாழிசை யாப்பில் ஒலி வித்தைகள் செய்து காட்டிய செயங்கொண்டானும் - பேச்சு மொழியை இலக்கிய மொழியாக முதன் முதலில் எடுத்தாண்ட மேலகரம் திரிகூடராசப்பனும் தமிழின் கவிதைக் கொள்கையைக் குறிப்பிடத்தக்க அளவுக்குப் புதிய பாதையில் செலுத்தியிருக்கிறார்கள்.

இந்த இலக்கிய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சேர்ந்து கொண்ட பாரதி களைத்து, இளைத்துக் கிடந்த தமிழ்க் கவிதைக்கு ஆறுதலான மாறுதல் தருகிறான்.

பாரதி இல்லையென்றால் தமிழ்க் கவிதை செத்திருக்காது. ஆனால் உலா வந்திருக்க முடியாது.

பாரதி புரட்சி செய்தவனல்லன், உருவத்திலும் உள்ளடக்கத்திலுமுள்ள பழைய மரபுகளைப் புதுப்பித்தவன். இந்த மண்ணின் மணத்தைக் கவிதைச் சீர்களில் காட்டியவன்.

தமிழ்க்கவிதை சிற்றிலக்கியங்களுக்குப் பிறகுதல புராணம் பாடித்தளர்ந்து, மடாலயங்களிலும் மன்னர் அவைகளிலும் ஓய்வு கொண்டிருந்த நேரம் பாரதி பிறந்தான்.

பாரதியின் இளம்பருவம் எப்படிக் கழிந்தது என்பதை விளக்க வந்த பேராசிரியர் அ.சீனிவாச ராகவன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

373

வலம்புரியின் மருத்துவச்சுபர்

## சிந்தனைக்கு...

**இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?**

பயப்பட வேண்டிய விடயங்களுக்கு பயம் இன்றி இருந்து கொள்வது ஆபத்தானது என்றும் அதே சமயம் பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்து கொண்டே இருப்பதும் ஆபத்தானது என்றும் நம்முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்வில் பயம் கொள்ளத் தேவையற்ற பலவற்றிற்கு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பால் குடிக்க பயம், தயிர் சாப்பிடப் பயம், தவசிமுருங்கை சாப்பிடப்பயம், இரவிலே இலை வகை உண்ணப் பயம், சில உயிர்க்காப்பு மருந்துகளை உள்ளெடுக்கப் பயம், இறால் சாப்பிடப் பயம், அகத்தி மரத்தை வீட்டில் வளர்க்கப் பயம், முட்டை சாப்பிடப் பயம், முட்டு வருத்தத்தால் கஷ்டப் படினும் பம் பாவிக்கப் பயம் இவ்வாறாக பயப்படத் தேவை அற்ற பலவற்றிக்கு நாம் பயந்து பயந்து வாழ்வதன் காரணம் என்ன?

அதேவேளை பயப்பட வேண்டிய பலவற்றிக்கு பயம் இன்றி வாழ்ந்து பல ஆபத்துக்களை தேடிக் கொள்கிறோமே? இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது? உடல் பருத்திருந்தும் உல்லாசமாய் உலாவி வருகிறோம். சந்தோசமாக சோடா குடிக்கிறோம். எதுவித பயமுமின்றி உடற்பயிற்சி செய்யாதிருக்கிறோம்.

உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று விளக்கமும் கொடுக்கின்றோம். தினமும் தொலைக்காட்சிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்து மகிழ்கிறோம். இரசாயனம் சேர்க்கப்பட்ட மென்பானங்களை அருந்துவதில் பெருமை கொள்கிறோம். சினிமா கதாநாயகர்கள் பாணியில் குடித்து புகைத்து கும்மாளம் அடித்து கதாநாயகர்களாய் உலாவருகிறோம். வாகனம் ஓடுவதில் "திறமையை" காட்ட முயல்கிறோம். இவ்வாறாக பயம் கொள்ள வேண்டிய பல விடயங்களை பயமின்றிச் செய்யத் துணிந்ததன் காரணம் என்ன?



**இந்த இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?**

**தெளிவு பெறுவோம்**


கஷ்டங்கள் வரும் பொழுது கடவுளின் ஞாபகம் சேர்ந்து வருகிறது. கவலைகளும் கஷ்டங்களும் தொடர்ந்தால் கடவுளிடம் மனமுருகி வேண்டியவையும் கிடையாது போனால் கோபம் கூட வருகிறது.

கேட்டும் கிடைக்காத போது கடவுள் நம்பிக்கையும் கேள்விக் குறி ஆகிவிடுகிறது. கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கும் எம்மைக் காப்பதற்கும் மட்டும் தான் கடவுள் இருக்கிறார்? சரி கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் கடவுள் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

நாம் எல்லாவற்றையும் கேட்க எல்லாமே கிடைக்குமானால் இன்னொருவனுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போகாதா? இது நியாயமாகுமா? இதையும் மீறி எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விடின் பூவுலகம் எவ்வாறு இயங்க முடியும். ஒன்றின் இழப்பிலே இன்னொன்று கிடைப்பதும் தோல்விகளும் வெற்றிகளும் மாறி மாறி ஏற்படுவதும் எதிர்பார்ப்பவற்றிலே சில கிடைக்காமல் போவதும் எதிர்பாராமலேயே சில கிடைக்கப் பெறுவதும் சர்வநிச்சயமானது.

கடவுளிடம் எம்மை சரியான பாதையில் வழிநடத்துமாறு கேட்போம். எமது மனோபலத்தையும் எதையும் தாங்கி சமாளிக்கும் மன உறுதியையும் வளர்த்து விடக் கேட்போம். எமது சந்தோசங்களையும் முன்னேற்றங்களையும் கடவுளிடம் பகிர்ந்து கொள்வோம். எமது கவலைகளையும் பிரச்சினைகளையும் அவரிடம் முறை யிட்டு ஆறுதலும் தெளிவும் பெறுவோம்.

எல்லாம் வல்ல இறைவன் உலகை சரியான பாதையில் வழிநடத்துவார்.



**பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்களா?**

வளரும் குழந்தைகளின் மனதிலே பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்கள் என்ற மனப்பதிவே இருந்து கொண்டிருக்கும். தம்மை எந்தக் கஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பார்கள், தாம் விரும்புவதை செய்து தருவார்கள், சரியான பாதையிலே நடத்துவார்கள், நிலாவைக் கூடக் கையில் பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் நல்ல விடயங்களாகத்தான் இருக்கும் என்றெல்லாம் நம்பிக்கொள்வார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்தக் குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளும் பொழுதும் தம்மிடையே சண்டை செய்யும் பொழுதும், அழும் பொழுதும், தமது இயலாமையை வெளிப்ப டுத்தும் பொழுதும், தீய நடவ டிக்கைகளில் ஈடுபடும் பொழுதும் குழந்தைகளின் மன ஓட்டம் குழப்பமடையும்.

இவர்களால் தம்மை பாதுகாக்க முடியுமா? என்ற பாதுகாப்பற்ற தன்மை தோன்றும். அந்த சிறிய மனங்களிலே தீய விடயங்கள் ஆழப்பதியும். இது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பெரும் பாதகமாக அமையும். எனவே சிறுவர் முன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் பற்றி சிந்திப்பது பயன்தரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்கேள்வி அறிவித்தல் - 2024

## கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2024.01.01- 2024.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2023.11.20 - 2023.12.04 (அலுவலக நாட்களில் மு.ப 9.00 - பி.ப 1.00)

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி** :- 2023.12.05 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

**கேள்விதிறக்கும் திகதி** :- 2023.12.05 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

**கேள்விதிறக்கும் இடம்** :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் , கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2023.12.05 ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2023.12.05 ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | **சேவைச்சந்தை -கிளிநொச்சி** | | | |
| 1 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 39,000.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை இல 01 கோழியிறச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,325,000.00 |
| | **கிளிநகர்ப் பகுதி** | | | |
| 1 | கிளிநொச்சி பசுமைப் பூங்கா அழுக்கலை நிலையம் | 2,000.00 | 1,000.00 | 19,537.20 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | 83,327.62 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 23,895.00 |
| 4 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 825,000.00 |
| | **பொதுச்சந்தை – பரந்தன்** | | | |
| 1 | பரந்தன் சந்தை ஆட்டிறச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 105,000.00 |
| | **பொதுச்சந்தை- வட்டக்கச்சி** | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தை மாட்டிறச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | 710,960.00 |
| 2 | இராமநாதபுரம் மாட்டி றைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 321,800.00 |
| 3 | வட்டக்கச்சி சந்தை கோழியிறச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 650,550.00 |
| | **பொதுச்சந்தை- இரணைமடு** | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 126,000.00 |
| 2 | இரணைமடு சந்தை கோழியிறச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 550,000.00 |
| | **கனகாம்பிகைக்குளம்** | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 3,207.60 |
| | **பொதுச்சந்தை- உருத்திரபுரம்** | | | |
| 1 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | 7,606.39 |
| 2 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 268,000.00 |
| 3 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 215,055.00 |
| | **பொதுச்சந்தை- தருமபுரம்** | | | |
| 1 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 579,000.00 |
| 2 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 155,200.00 |
| | **பொதுச்சந்தை- கல்லாறு** | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 37,881.03 |
| | **வன்னேரிக்குளம்** | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 38,961.00 |
| | **பொதுச்சந்தை- முரசுமோட்டை** | | | |
| 1 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 33,223.77 |
| | **பொதுச்சந்தை- அக்கராயன்** | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 47,930.30 |
| | **பொதுச்சந்தை- புன்னைநீராவி** | | | |
| 1 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 169,000.00 |

### நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ள வர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப் படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைக்காரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக் கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதிக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப் பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணங்கள் செலுத்தத்தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம், மட்டுமே அறவிட முடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதி விசேஷமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.

(16 ஆம் பக்கம் பார்க்கவும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15 ஆம் பக்க தொடர்ச்சி....)

15. ஆரம்பக்கேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.

17. இறைச்சிக்கடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.

18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந் தனைகளையும் குத்தகைக்காரர் கடைப்பிடிக்க வேண்டும்.

19. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

20. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-7664)

# சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக வைத்தியர் பாலித மஹீபால நியமனம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் புதிய செய லாளராக முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் பாலித மஹீபால நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக ஜனக ஸ்ரீசந்திர குப்தா சுகாதார அமைச்சின் செயலாளராக செயற் பட்டார்.

இந்தநிலையில், அவரது பதவிக்கு தற்போது வைத்தியர் பாலித மஹீபால நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அவர் எதிர்வரும் 20 ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற் கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 |
| தக்காளி | 320 | 400 | 380 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 160 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 400 |
| கரட் | 350 | 400 | 450 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 |
| புடோல் | 250 | 250 | 200 | 280 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 350 |
| சின்ன வெங்காயம் | 380 | 380 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 500 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 140 | 200 |
| பயற்றங்காய் | 800 | 800 | 800 | 600 |
| லீக்ஸ் | 300 | 250 | 240 | 400 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 400 | 800 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 280 | 350 | 350 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 550 |
| வெங்காயப்பூ | -- | 700 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 180 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 200 | 40 | 50 |
| ஈரப்பலா | 200 | 200 | -- | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2969

ஆதவன்




நிஷாந்தன்




சிந்துஜன்




சிவானு




வந்திதா




மாதங்கி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும் .
– சீனப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாவீரர்கள் என்றாலே உங்களுக்கு இத்துணை பயமா?

இருளைக் கண்டு பயப்படுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இங்கோ சிலர் ஒளியைக் கண்டு பயம்கொள்கிறார்கள் என ஒரு பத்திரிகை, ஆசிரியர் தலையங்கம் எழுதியதை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஆம், விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்கிய காலத்தில் சிங்கள மக்களிடம் உச்சமான பயம் இருந்ததென்பது மறுக்கமுடியாதஉண்மை.

தவிர, புலிப்பயம் இந்த நாட்டின் அனைத்துப் படைகளையும் நடுங்க வைத்தது.

உண்மை. உறக்கத்தில் இருந்த ஓர் இராணுவச் சிப்பாய் கனவு கண்டெழுந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் அருகில் இருந்த சிப்பாய் உயிரிழந்துபோன சம்பவம் தெரிந்ததே.

ஆக, கனவிலும் புலிகளாகவே அன்றைய நிலைமை இருந்தது.

ஆனால் இப்போது விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லை. அந்த அமைப்பின் தலைவர் உள்ளிட்ட தளபதிகளையெல்லாம் தாம் இல்லாமல் ஆக்கிவிட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

தவிர, படையினரிடம் சரணடைந்த அத்தனை பேரையும் காணாமல் ஆக்கிவிட்டனர்.

இதற்கும் மேலாக முன்னாள் போராளிகளைக் கைது செய்து சிறையில் அடைத்து அவர்களைச் சித்திரவதை செய்து இனி அவர்களால் எதுவும் செய்யமுடியாதெனும் நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டனர்.

ஆக, இனியொரு ஆயுதப் போராட்டம் சாத்தியமாகாதென்பதே யதார்த்தம்.

நிலைமை இதுவாக இருக்கிறபோதிலும் மாவீரர்களை நினைவேந்துவதைத் தடை செய்வதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைப் பார்க்கும்போது இவர்கள் மாவீரர்கள் என்றதுமே பயந்து போகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆம், மாவீரர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய வீரமறவர்கள். அவர்கள் இந்தநாட்டுக்கு எதிராகப் போராடவில்லை. இந்த நாட்டைக் கைப்பற்றும் நோக்கிலும் அவர்களின் போராட்டம் அமையவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் உரிமையோடும் சுதந்திரமாகவும் அச்சமற்றும் வாழவேண்டும். அதற்காகவே அவர்கள் ஆயுதமேந்தினர்.

அவ்வாறானதொரு முடிவை தமிழ் இளைஞர்கள் எடுப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள் சிங்களப் பேரினவாதிகள் என்பதே உண்மை.

நிலைமை இதுவாக இருக்கின்றபோதிலும் மாவீரர்களை நினைவேந்துவதைத் தடை செய்வதற்காக இலங்கைப் பொலிஸார் நீதிமன்றப் படிகளில் ஏறி நிற்பது வெட்கக்கேடானது.

இந்த நாட்டின் பொலிஸார் தமிழ் மக்களுக்குமுரியவர்கள் என்றால், அவர்கள் மாவீரர்களை நினைவேந்துவதற்கு தடைவிதிக்க வேண்டுமென நீதிமன்றங்களிடம் கோரிக்கை முன்வைப்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

தவிர, மாவீரர்களை நினைவேந்துவது சிங்களத் தரப்புகளுக்கு உடன்பாடில்லை எனில், போரில் உயிரிழந்த படையினரை நினைவேந்துவது தமிழ் மக்களுக்கு உடன்பாடானதல்ல என்பதே உண்மை.

ஆக, உயிரிழந்தவர்களை நினைவேந்துவதற்குக் கூடத் தடைவிதிக்க வேண்டுமென நினைக்கின்ற இலங்கைப் பொலிஸாரின் சிறுமைத்தனத்தை என்னவென்று சொல்வது.

## ஆங்கில, சிங்கள பாட ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தை www.doenets.lk இணையத் தளத்தில் "Our Services" என்பதன் கீழ் 'Online Applications – Recruitment Exams" என்ற இணை யத்தளங்கள் மூலம் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் எதிர்வரும் முதலாம் திகதி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## ராஜபக்ஷக்களை யாரும் அழிக்க முடியாது -முருத்தெட்டுவ

(கொழும்பு)

ராஜபக்ஷமாரை யாராலும் அழிக்க முடியாது என முருத்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு முருத்தெட்டுவ ஆனந்த தேரரின் தலைமையில் நடத்தப்பட்டுள்ளது.

இதில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை காப்பாற்றிய தலைவனுக்குக் கடமையாகத்தான் இந்த அஞ்சலியைச் செய்கிறேன்.

இந்த நிகழ்வுக்கு பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தேன். சில முகங்களையே இங்கே காணக் கிடைக்கிறது. நாம் யாரும் தோற்கவில்லை.

நாமல் ஒரு மூலையில் இருக்கிறார். அப்படி இருக்க முடியாது. முன்னாள் வந்து தந்தை சென்ற பாதையில் முன் செல்ல வேண்டும். ராஜபக்ஷமாரை யாராலும் அழிக்க முடியாது என தெரிவித்தார். (நி-5)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கடுகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் 22 ஆவது இரத்ததான முகாமானது இன்று ஞாயிற்றுக்கிழமை கருகம்பனை கலாசார மண்டபத்தில் 8.30 மணி தொடக்கம் 3.30 மணி வரைநடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பத்து மாதங்களில் 75 ரயில்கள் தடம்புரழ்வு

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த பத்து மாதங்களில் 75 ரயில்கள் தடம்புரண்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டைவிட இந்த எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டுகிறது என்று ரயில்வே துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

புகையிரதப் பாதையில் பயன்படுத்தப்படும் தண்ட வாளங்கள் துருப்பிடித்து போவதினால் தடம்புரழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவ் வருட காலப்பகுதியில் புகையிரதக் கடவைகளில் பயன்படுத்தப்பட்ட 346 பாதுகாப்பு கடவைகள் சேதமடைந்துள்ளதுடன், புகையிரதக் கடவைகளை கடந்து செல்லும் சாரதிகள் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்துவதே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நவம்பர் இறுதிக்குள் சா/தர பரீட்சை பெறுபேறு

2022 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நவம்பர் மாத இறுதிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் பரீட்சை பெறுபேறுகளை கணனிமயமாக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## பதவியிலிருந்து விலகிய சஞ்ஜீவ ஜயவர்தன

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன விலகியுள்ளார். நிதியமைச்சு அவரது பதவி விலகலை உறுதிப்படுத்தியுள்ளது.

தற்போதைய வெற்றிடத்திற்கு ஜனாதிபதியினால் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவார் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## இந்தியத் தூதுவர்-அநுர சந்திப்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடி குறித்து நீண்ட நேரம் இருவரும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச் செயலாளர் எல்டோஸ் மேத்யூவும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் விஜித ஹேரத்தும் இச்சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இனியும் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது-மரிக்கார்

(கொழும்பு)

நாட்டு மக்களை இனி வரும் காலங்களில் ஏமாற்ற முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகிர் மாரிக்கார் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்றது.

இதில்கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தின் பொய்களை நம்புவதற்கு மக்கள் தயார் இல்லை என்றும் புதிய மாற்றத்தையே எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2023

'மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும் உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொறியியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்த பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்.'

-பொ.ஐங்கரநேசன் (தலைவர் தமிழ்த்தேசியப்பசுமை இயக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கு காசாவிலும் நுழைய தயாராகும் இஸ்ரேல் இராணுவம்



(காசா)

வடக்கு காசாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக தேடுதல் வேட்டை நடத்திய இஸ்ரேல் இராணுவம் அடுத்ததாக தெற்கை குறி வைத்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பாக தெற்கு காசா நகர வீதிகளில் இஸ்ரேல் இராணுவம் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வருகிறது.

ஹமாஸ் அமைப்பினரின் வசிப்பிடங்கள் அல்லது அவர்களுடன் காணப்படும் மக்களின் உயிர் அபாயத்தில் தள்ளப்படும் என அதில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

முன்னதாக தெற்கு நோக்கிய பயணம் குறித்து இஸ்ரேலிய இராணுவ தலைவரும் சூசகமாக தெரிவித்து இருந்தார். வடக்கு, தெற்கு என ஹமாஸ் அமைப்பினர் எங்கே இருந்தாலும் அவர்கள் மீது தாக்குவோம் என அவர் கூறியிருந்தார்.

தற்போது தெற்கிலும் இராணுவம் நுழையும் திட்டம் அவர்களுக்கு மேலும் பீதியை அளித்து இருக்கிறது. தெற்கு காசாவில் இஸ்ரேல் ஏற்கனவே வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் அங்கே எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. தற்போது தரைவழி தாக்குதலும் தொடங்கினால் அந்த மக்களின் நிலைமை மேலும் மோசமாகும் என கூறப்படுகிறது.

காசாவில் இஸ்ரேல் தொடுத்துள்ள போர் தொடரும் நிலையில் போரில் இருதரப்பிலும் 12 ஆயிரத்துக்கு அதிகமானோர் இதுவரை பலியாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## பணயக் கைதிகளின் விடுதலை அடுத்த வாரம் சாத்தியமாகும்?



(காசா)

ஹமாஸ் தன்னிடமுள்ள பணயக்கைதிகளில் சிலரை அடுத்தவாரமளவில் விடுதலை செய்யலாம் என பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள லெபானினின் புலனாய்வுபிரிவின் முன்னாள் தலைவர் அபாஸ்இப்ராஹிம் சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தன்னுடைய சில நிபந்தனைகளை மீளப்பெற்றால் அல்லது ஹமாசின் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் பணயக்கைதிகள் விடுதலை சாத்தியமாகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனியர்கள் மற்றும் சிறுவர்களை விடுதலை செய்தால் ஹமாஸ் பணயக்கைதிகளை விடுதலை செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

காசா மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதியளிக்கவேண்டும் என ஹமாஸ் நிபந்தனை விதித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## பிரதமர் பதவியை இழக்கும் அபாயத்தில் ஜஸ்டின் ட்ரூடோ



(ஒட்டாவா)

கனடாவில் அரசியல் சூழல் தொடர்ந்து மோசமடைந்து வரும் நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மத்தியிலும் அவரது சொந்தக் கட்சியிலும் அவருக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

சீக்கிய மதத் தலைவர் கொலை விவகாரத்தில் இந்தியாவை குற்றஞ்சாட்டிய நிலையில், சர்வதேச அளவில் அவர் சர்ச்சையில் சிக்கியிருந்தார்.

அத்தோடு விலைவாசி அதிகரிப்பு, வீட்டு வாடகை அதிகரிப்பு, பணவீக்கமும் மோசமான நிலையை அடைந்துள்ள நிலையில் மக்கள் அவர் மீது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதனால், சொந்தக் கட்சியிலேயே எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அடுத்த தேர்தல் நடைபெறும் 2025 வரை அவர் பிரதமர் பதவியில் இருப்பாரா என்பதிலேயே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சொந்தக் கட்சியில் எதிர்ப்பு அதிகரித்தாலும் கூட கூட்டணி ஆதரவு இருப்பதாலேயே அவரால் இப்போது அதிகாரத்தில் இருக்க முடிகிறது.

இருப்பினும், பிரதமர் பதவியில் இருந்து விலகினால் அது தோல்வியை ஒப்புக் கொண்டது போல ஆகிவிடும். அதன்பிறகு ட்ரூடோவுக்கு அரசியல் எதிர்காலமே இருக்காது என்பதால் அவர் பதவி விலக மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## அந்தாட்டிக்காவில் தரையிறங்கிய பயணிகள் விமானம்



உலக வரலாற்றில் முதன் முறையாக அந்தாட்டிக்காவில் பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்கி சாதனை படைத்துள்ளது.

நோர்ஸ் அட்லாண்டிக் ஏர்வேஸ் விமான நிறுவனத்தின் விமானமே இந்தச் சாதனையை படைத்திருக்கிறது.

கடந்த புதன்கிழமை அந்தாரட்டிக்காவின் குயின் மவுட் லேண்ட் எனும் இடத்தில் போயிங் 787 ட்ரீம் லைனர் விமானத்தை விமானிகள் தரையிறக்கியுள்ளனர்.

நோர்வே நாட்டிலிருந்து 45 விஞ்ஞானிகள் மற்றும் 12 தொன் பொருட்களுடன் புறப்பட்ட இந்த விமானம் தென் னாபிரிக் காவில் தரையிறங்கி எரிபொருளை நிரப்பியது.

பின்னர் சுமார் 40 மணி நேர பயணத்திற்கு பிறகு அந்தாரட்டிக்காவில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளது.

இதன் மூலம் இனி அந்தார்ட்டிக்காவிலும் பயணிகள் விமானத்தை தரையிறக்க முடியும் என்கிற நிலை உருவாகியுள்ளது. (நி-5)

### போரின் பின்

## காசாவிற்குள் முதன்முறையாக கொண்டு செல்லப்பட்ட எரிபொருள்

(காசா)

காசாவில் போர் தொடங்கி ஆறு வாரத்தில் முதன் முறையாக எரிபொருளை உள்ளே கொண்டு செல்வதற்கு இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

அனைத்துலக நெருக்குதலுக்கு இஸ்ரேல் அடிபணிந்திருக்கிறது.

தினமும் இரண்டு லொறிகளில் எரிபொருள் எடுத்துச் செல்ல அனுமதி தருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதற்குமுன் எரிபொருள் இல்லாததால் உணவை விநியோகம் செய்ய முடியவில்லை என்று ஐக்கிய நாட்டு உதவி அமைப்புகள் தெரிவித்தன. உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதால் பெரிய அளவில் பட்டினியும் நோய்ப் பரவலும் ஏற்படும் அபாயம் இருப்பதாக உலக உதவி அமைப்புகள் எச்சரிக்கை விடுத்தன.

எகிப்திலிருந்து ராஃபா பாதைவழியாகச் சுமார் 17,000 லீற்றர் எரிபொருள் எல்லையைத் தாண்டி காசாவுக்குள் சென்றிருப்பதாகப் பாலஸ்தீன எல்லை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடிநீரை எடுப்பதற்கு உதவியாகவும் சாக்கடையைச் சுத்தம் செய்வதற்கும் மட்டுமே குறைந்தபட்ச எரிபொருளை உள்ளே அனுப்ப அனுமதிப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (நி-5)

**மணமகன் தேவை**

1989. யாழிந்து. உத்திராடம். ICT. யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல: 9882.தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை( 2012 ஆம் ஆண்டு முதல்). www.EQMarriageService.com இணையவழி திருமண சேவை, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.

**மணமகள் தேவை**

1993. யாழிந்து.ஹஸ்தம். Electronic Engineer. கொழும்பு. மணமகன் பதிவு இல: 9930.தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை(2012 ஆம் ஆண்டு முதல்). www.EQMarriageService.com இணையவழி திருமண சேவை, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.

**மணமகள் தேவை**

1991. யாழிந்து.சதயம். Development Officer. யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல: 9900.தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை(2012 ஆம் ஆண்டு முதல்). www.EQMarriageService.com இணையவழி திருமண சேவை, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளைஞனின்...

31 வயதான கஜானன் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## 22 தமிழக...

விசாரணைகளின் பின்னர் கடற்படையினர் மயிலிட்டி துறைமுகத்தில் வைத்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

மீனவர்கள் 22 பேரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-60)

## வடக்கு - கிழக்கில்...

துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட கிழக்கில் இன்று தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது.

சீரற்ற காலநிலையினால் தொடர்ச்சியாக மழை கிடைக்கப்பெற்று வருகின்றது. இம்மழை இன்னும் சில தினங்களுக்கு தொடர்ச்சியாக இருக்கும்.

முல்லைத்தீவுக்கு தெற்காக நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் காற்று சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கன மானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார். (ம-33)

## பற்றைக்குள்...

லாம் எனக் கருதப்படும் அந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் நீதவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். (ம-104)

## வவுனியா...

துள்ளனர்.

நேற்று மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது

குறித்த விபத்தில் அக்கராயன் பகுதியில் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவில் பணிபுரியும் வெலிஓயா பகுதியைச் சேர்ந்த திசாநாயக்க (வயது - 27), மற்றும் சாந்தசோலையைச் சேர்ந்த சண்முகநாதன் (வயது - 63) ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவர்.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

குறித்த மோட்டர் சைக்கிள் வவுனியா, ஏ9 வீதி சாந்தசோலை சந்திப் பகுதியில் பயணித்தபோது, எதிர்த் திசையில் இருந்து வந்த மோட்டர் சைக்கிள் ஒன்று சாந்தசோலை சந்தியில் திரும்ப முற்பட்டுள்ளது. இதன் போது இரு மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளாகின.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், பொலிஸ் உத்தியோகத்தரான இளம் குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே மரணமடைந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸார் திருமணமாகி ஒரு வருடம் கடந்த நிலையில் அவருக்கு தற்போது ஒரு மாதம் நிரம்பிய கைக்குழந்தையொன்றும் உள்ளது. (ம-33,104,250,316)

## நவம்பர் 27...

நாட்டு புலனாய்வு அமைப்புகள் தகவல் தெரிவித்துள்ளன.

மாவீரர் தினத்திற்கு முன்னரே செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தலைவரின் மகளின் குரலுடன் கூடிய காணொளி ஒன்று வெளியிட திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கு நோர்வேயில் உள்ள புலிகளின் தலைவர் பிரபாகரனின் உறவினர்களின் சம்மதம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ம)

## 30 வகையான...

வகையான பொருட்களுக்கு வற் விதிக்கப்பட்டு 15 வீதமாக உள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வற் வரியை 18 வீதமாக அதிகரிக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர் மற்றும் மக்களுக்கு சில அத்தியாவசிய பொருட்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மின் கட்டணத்திற்கு வற் அறவிடப்பட மாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனவரி மாதம் முதல் எரிபொருள், சுகாதாரம் உள்ளிட்ட பல வகையான பொருட்களுக்கு வற் அறவிடப்படும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் எரிபொருளுக்கு வற் வரியை விதிக்க முடிவு செய்யவில்லை என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## நெருக்...

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கட்சி உறுப்பினர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து அண்மைய நாட்களில் நாடளாவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த பின்னணியில், இலங்கையில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணம் குறைக்கப்பட வேண்டும், அத்தியாவசிய பொருட்களின் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும், வரிச்சுமை தளர்த்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல காரணங்களை முன் வைத்து நேற்று கொழும்பின் புறநகரான நுகேகொட பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய வளங்களை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்து, அநீதியான சுமையை குறை, மக்களை வதைக்கும் வெறிபிடித்த ஊழல்மிக்க ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம் போன்ற பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ம)

## ஜனாதிபதி ரணில் - சமந்தா பவர் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அபிவிருத்திக்கான ஐ.நா முகவர் நிறுவனத்தின் (USAID) நிர் வாகி சமந்தா பவர் ஆகியோருக்கிடை யிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலைதீவு தலைநகர் மாலேயில் நடைபெற்றது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள கலாநிதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்றிருந்த நிலையில் குறித்த சந்திப்பு நடைபெற்றது. (ம)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 6 2024

ஆங்கில மொழிமூல கணித பாடம்

குழுமுறை வகுப்பு ஆரம்பமாகின்றது.

இல. 19, நாயன்மார் வீதி, நல்லூர்.

தேசிய பாடசாலை ஆசிரியர் (17931)

**077 864 5971**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7668)

VISA

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

**0777-068-777**

## CANADA

### VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7668)

**0777-068-777**

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்


V2 TRAVELS

## வேலைவாய்ப்பு

வெளிநாட்டினை தளமாகக் கொண்டியங்கும் நிறுவனம் ஒன்றுக்கு உள்நாட்டில் ஆங்கிலம், சிங்களம், கணனி அறிவுடைய ஆட்கள் தேவை. (17925)

**077 601 1135**

## கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற கிராம அலுவலரும் முன்னாள் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான

### திரு. கணேசு முருகையா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (17926)

இணுவையூர் வி.கே.குகானந்தன்
( முன்னாள் உறுப்பினர் நல்லூர் பிரதேச சபை, ஐக்கிய தேசிய கட்சி. )

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**076 573 4507** (17877)

## காணி விற்பனைக்கு

செருக்கற்புலம், கோண்டாவில் எனும் முகவரியில் அமைந்துள்ள 'ஒரு பரப்பு' காணி நியாயமான விலையில் விற்பனைக்கு.

விலை : 3500000/= (17835)

**077 002 8988**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam } புதிய பிரிவுகள்
IELTS } ஆரம்பம் (17459)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## காணி விற்பனைக்கு

யாழ். மயிலிட்டியில் பொன்னாலை - K.K.S – பருத்தித்துறை கரையோர காப்பற் வீதியில் இருந்து 200m தூரத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

விலை 1 பரப்பு 16 இலட்சம் (17868)

தொடர்புகளுக்கு

**075 521 3533**

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 51 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(17916)

**071 173 3911, 076 853 5022, 076 213 7239**

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் விற்பனை நிறுவனத்திற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ தொழில் செய்யக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.**

- தொழில் முன் அனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் அவசியம்
- சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் அவசியம்

**கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் யாவும் கல்வி மற்றும் தொழில் தகைமையை அடிப்படையாககொண்டு தீர்மானிக்கப்படும்** (17859)

**076 072 1245, 021 223 2721**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg கோதுமை மா | - 181/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 189/= | |
| 1 Kg றவை | - 289/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299/= | (max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 446/= | (max 3Kg) |
| 1 Kg நீட்டல் பச்சை | - 170/= | |
| 1 Kg குத்தரிசி (ஆட்டக்காறி) | - 199/= | |
| 400g அங்கர் பால்மா | - 1025/= | ~~(1080/=)~~ |
| 180ml Chik Shampo | - 370/= | ~~(480/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= | ~~(330/=)~~ |
| 70g பேபி சோப் | - 108/= | ~~(145/=)~~ |
| 01 சந்தூர் சோப் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 L தேங்காய் எண்ணெய் (bulK) | - 575/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் (bulk) | - 560/= | |

1025/=




~~1080/-~~


(17935)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நவரத்தினம் புண்ணியமூர்த்தி**

மண்ணில்: 24.02.1941
விண்ணில்:- 15.11.2018

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வைரவர் கோவில் வீதி,
நெல்லியடி கிழக்கு,
வதிரி, கரவெட்டி. (17914)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org